# கோட்சே காந்தியைக் கொன்றது ஏன்?

1985

- தலித் சாகித்ய அகாடமி -

© *Dalit Cultural Front*

**WHY GODSE KILLED GANDHI?**

In Tamil:
GODSE GANDHIYAI KONDRADHU YEN?

V. T. RAJSHEKAR

*Translated by*:
V. M. MURUGESAN &
J. ANANDARAJ

*First Edition*:
JULY 1985

**Rs. 2**

*Published by*:
DALIT SAHITYA AKADEMY
32, 4th St. Venkatesapuram New colony
Dr. Ambedkar College Road
Madras 600 012

DSA–T [4] –3000

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS-600 007—1985. B 6886

# கோட்சே காந்தியைக் கொன்றது ஏன்?

பல லட்ச ரூபாய்களைக் கொட்டி இரைத்து, பிரிட்டிஷ்காரர் களால் தயாரிக்கப்பட்டு, உலகமே வியந்து பாராட்டிப் போற்றிய தாய்க் கூறப்பட்ட 'காந்தி' எனும் திரைப்படம் ஆர்.எஸ்.எஸ். தலைவரான நாதுராம் கோட்சே ''தேசப் பிதா''வை துப்பாக்கி யால் சுட்டுக் கொல்வதைப் படத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் சித்தரித்துள்ளது. ஆனால் காந்தி ஏன் சுட்டுக்கொல்லப்பட்டார்- என்பது பற்றி அப்படத்தில் எந்த இடத்திலும் புலப்படுத்தப்பட வில்லை. மோகன்தாஸ் காந்தியைப் பற்றிய படம் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வெகுவாக வரவேற்கப்பட்டதாய்ச் சொல்லப் பட்டது. ஆனால் அவர் ஏன் கொல்லப்பட்டார் என்பது பற்றிய ஓர் விவாதமோ அல்லது விளக்கமோ எங்கேனும் உருவானதாய் நமக்குத் தெரியவில்லை. மேல்ஜாதி இந்துகளின் 'அபார அறிவுத் திறம்' என்பதே தமக்குச் சங்கடமான 'சங்கதிகளை' இரகசிய மாக மூடி மறைத்துக்கொள்வதேயாகும். ஆனால் கோட்சே காந்தியைக் கொன்றது ஏன்? என்ற கேள்விக்கு 122 பக்கங்களுள்ள தம் புத்தகத்தில் மிகத் தெளிவாக பதிலளித்துள்ளார்.

'MAY IT PLEASE YOUR HONOUR'—மே இட் ப்ளீஸ் யுவர் ஹானர். என்ற அப்புத்தகம் அவருடைய இளைய தம்பி கோபால் கோட்சே அவர்களால் 1977-ல் முதன்முறையாக வெளி யிடப்பட்டது. பிறகு அப்புத்தகத்திற்குத் தடை விதிக்கப்பட்டது. (Vitasta Prakashan, 1206/1- B.J.M. Road, Pune 411004- India Rs. 15/-). அப்புத்தகம் இதுவரை பலமுறை பதிப்பிக்கப் பெற்று விட்டது. அப்புத்தகம் இந்தியாவிலுள்ள பல்லாயிரக்கணக்கான கோட்சே பிரியர்களிடையே இரகசிய விநியோகத்திலுள்ளது. அப் புத்தகத்தைப் படிக்கும், ஒருவர் இறுதியில் கோட்சே என்ன செய் தாரோ அச்செயல் மிகச் சரியானதேயென மனமுவந்து ஏற்குமள வுக்கு வன்மைமிகு வாதங்களை ஆணித்தரமாக அப்புத்தகம் உள்ள டக்கியுள்ளது. அப்புத்தகத்தைப் படிக்கும் யாரொருவரும் கோட்சே கொண்டிருந்த இலட்சிய உறுதிப்பாட்டினை, அதாவது தம் உயிரைப் பணயம் வைத்தாவது பார்ப்பனீயம் பாதுகாக்கப் படவேண்டும் என்ற அவர்தம் இலட்சியக் கொள்கைப் பற்றினைப் பாராட்டாமலிருக்கமுடியாது. கோட்சேயின் சிறப்புத் தன்மை என்னவென்றால், அவர் ஒருபோதும் தம் உள்நோக்கத்தை ஒளித்துக்கொண்டதில்லை. எனவே இச்சிறிய புத்தகம், இப்போ தெல்லாம் நா—நயமின்றி வேதகால மரபுகளைக் கைவிட்டு

மார்க்சியப் போர்வைக்குள் பார்ப்பனீயத்தை மறைத்துப் பாது காக்கத் துவங்கியுள்ள சில பார்ப்பான் தலைவர்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் உதிர்த்துவரும் சொல்லலங்காரக் கட்டுமானத்தைத் தகர்த்திடும் கூர் ஆயுதமாகும்.

எனவே நாதுராம் கோட்சே ஆர்.எஸ்.எஸ். காரர்களின் வேதம் எனப் போற்றப்படும் 'சிந்தனைக் கொத்து' (Bunch of Thoughts) எனும் நூலை எழுதிய குரு கோல்வால்க்கரின் உண்மை யான சீடன் எனலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கோட்சேயின் புத்தகம் நீதி மன்றத்தில் நாதுராம் கோட்சே கொடுத்த வாக்குமூலங்களின் தொகுப்பேயாகும். நாதுராம் கோட்சே காந்தியை ஒருபோதும் 'மகாத்மா காந்தி' எனக் குறிப்பிடவில்லை. பார்ப்பனீய ஆதிக்கம் வளர காந்தி செய்த தொண்டுகளுக்காக பார்ப்பான்கள் வெறும் காந்தியை ''மகாத்மா காந்தி'' என்றழைத்தார்கள். பார்ப்பனீ யத்தின் தாக்கத்தை அறிய விரும்புவோர், பார்ப்பான்களின் சிந்தனையோட்டத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவோர் 'இந்திய யூதர்கள்' என்றழைக்கப்படும் இச்சிறு கும்பல் காந்தியை எப்படிப் பயன்படுத்திக் கொண்டன, இறுதியில் காந்தியை அவர்களே ஏன் சுட்டுக் கொன்றனர், கொன்ற பின்பு இந்தியாவை ஆளும் கும்பலின் வழி நடைத் தத்துவமாக காந்தியத்தை எப்படி சுவீகரித்துக்கொண்டனர்—என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

## 'மகாத்மா'வா' காந்தியா ?

ஒடுக்கப்பட்ட, தலித் மக்களின் ஒப்பற்ற தலைவர்—பேரறிஞர் அம்பேத்கர் அவர்கள். அவர் காந்தியை 'மகாத்மா' என்றிடாமல் 'திரு. எம். கே. காந்தி' என்று அழைத்ததற்காகச் சில இந்து மேல் சாதித் தலைவர்கள் பேரறிஞர் அம்பேத்கர் அவர்களைக் கடிந்து கொண்டனர். ஆனால் இந்துயிசத்தைப் பாதுகாக்கவென்றே காந்தியைச் சுட்டுக் கொன்ற கோட்சே காந்தியை திரு. காந்தி என்றுகூட அழைக்கவில்லை, வெறும் காந்தி என்றே அழைத்தார். பார்ப்பான்களின் ஆளுமை என்பது, அவர்கள் செய்வதெல்லாம் சரி மற்றவர்கள் செய்வதெல்லாம் தவறு—என்பதேயாகும். இதனை நிர்ணயிப்பது யார்? பார்ப்பான்களே போலீசாராகவும், நீதிபதிகளாகவும் தூக்கிலிடும் கொலைகாரர்களாகவுமுள்ள அனைத்து செயல்களின் பிரதிபிம்பமாயுள்ளனர்.

காந்தி கொலை வழக்கை விசாரிக்க ஆட்மாசரன் அகர்வால், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையில் ஓர் விசேஷ நீதிமன்றம்

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. அந்நீதிமன்றம் புகழ்பெற்ற தில்லி செங்கோட்டையில் இயங்கியது. ஆர்.எஸ்.எஸ். காரர்களால் 'புடம் போட்ட' தேசிய வாதி என்றழைக்கப்பட்ட பிரபலமான வீர சவார்க்கர் உட்பட அக்கொலை வழக்கில் 12 பேர்கள் குற்றவாளிகளென நிறுத்தப்பட்டனர். கோட்சேயின் அப்புத்தகம், முஸ்லிம்களுக்கெதிராக பார்ப்பான்கள் கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சியை இன்றும்கூட துல்லியமாய் வெளிப்படுத்தும் மிகச் சரியான சாட்சியாதார நூலாக உள்ளது. இஸ்லாத்துக்கும் பார்ப்பனீயத்துக்குமிடையிலுள்ள நிலை பாம்புக்கும் கீரிக்குமிடையே உள்ள நிலைக்கொப்பாகும். இன்றைய ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் தம் சுயநலத்துக்காக காந்தியைப் போற்றலாம். அவர்களின் அரசியற் (கிளை) பிரிவான பி.ஜே.பி. கட்சி காந்தியிசத்தைத் தம் அரசியற் சித்தாந்தமாக சுவீகரித்துக்கொள்ளலாம். ஆனால், காந்தி ஒரு இந்து விரோதி என்றும், யார் ஒருவர் இந்து விரோதியோ அவர்களெல்லாம் இந்தியாவில் தேச விரோதிகள் என்றும் மிகத் தெளிவாக கோட்சே அவர்தம் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். கோட்சேயின் புத்தகத்தில் பெயரின்றி எழுதப்பட்டுள்ள அறிமுகப் பகுதியில் 'கீதை'யைப் பற்றி காந்தி சொல்லி வந்த கருத்துகள் தவறானவை என்றும் பூனாவைச் சேர்ந்த சித்பாவன் பார்ப்பானான பால கங்காதர திலகர் சரியாகச் சொன்ன விளக்கங்களினின்றும் வேறுபட்டிருப்பதாயும் சொல்லப்பட்டுள்ளதாம். (Read, 'Two Brahmins from Poona', Pages 359, 375 in *Freedom at mid–night* by COLINSE and LAPIERRE).

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்த முதல் இந்து தலைவர் சித்பாவன் பார்ப்பானான பால கங்காதர திலகரேயாவார். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைத் தோற்றுவித்த வீர் சவார்க்கரும் சித்பாவன் பார்ப்பானேயாவார். வீர் சவார்க்கர் திலகரின் சீடர். குஜராத்தி பனியாவான மோகன்தாஸ் காந்திக்கு மக்கள் மத்தியில் பெருகி வரும் புகழை திலகர் பெரிதும் வெறுத்தார். 'தேசீய' இயக்கத்தின் தலைமை பார்ப்பான்களிடமிருந்து பார்ப்பானல்லாத காந்தியின் கைக்கு மாறிடுவதைத் தடுத்திட வேண்டும் என்று திலகர் தேசீய வாதிகளுக்கு அறைகூவல் விடுத்தார். இதுவே காந்தியின்மேல் பார்ப்பான்கள் கொண்டிருந்த அதிருப்தியின் இரகசியமும், இறுதியில் ஒரு பார்ப்பானாலேயே காந்தி சுட்டுக் கொல்லப்பட்டதற்கான காரணமுமாகும். காந்தி படத்தைத் தயாரித்து வெளியிட்ட ரிச்சர்ட் அட்டன்பருவிற்கு இவ்வுண்மைகளைச் சொல்லத் திராணியில்லை. ஏனெனில் அப்படத் தயாரிப்புக்கு பண முதலீடு செய்தவர் வேறொரு பார்ப்பானாவார்.

## ஏகபோக அந்தஸ்தே பார்ப்பான்களின் ஒரே குறி

காந்தி தம் வாழ்நாளெல்லாம் 'கீதை'யின் புகழ்பாடி 'ராம்துன்' பஜனை செய்து பார்ப்பான்களின் அடிவருடியாய்ச் சேவகம் புரிந்தும், வைதீகப் பார்ப்பான்களின் கும்பல் அவரை வெறுத்தொதுக்கி இறுதியில் சுட்டுக் கொன்ற கொடுஞ் செயல் இதனை தெளிவாகப் புலப்படுத்தவில்லையா? என்னென்ன கொள்கைகளை காந்தி ஏற்றுச் செயல்பட்டாரோ அவைகளை யெல்லாம் மறுதலித்ததோடு, வீர் சவார்க்கரும் கோல் வால்க்கரும் காந்தியை இந்து விரோதி எனவும் தேச விரோதி எனவும் பிரகடனப்படுத்தினார்கள். ஜவகர்லால் நேரு தலைமையிலான சோஷலிசப் பார்ப்பான்கள் காந்தியின் தலைமையை ஏற்றுக் கொண்டதன் காரணம் இயன்றவரை 'மகாத்மா'வின் செல்வாக் கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ப தைத் தவிர வேறல்ல. பார்ப்பான்களுக்கு எந்த ஒரு கட்சியும் சாசுவதமானதல்ல. ஆனால் சமூகத்தில் நிரந்தர ஏகபோக அந்தஸ்தே அவர்களுக்குப் பிரதானமானது. இன்றுங்கூட இதுவே நிலைத்திருக்கிற பேருண்மையாகும். எனவேதான் பார்ப்பான்கள் ஒரே அடைகாப்புக்குள் ஒருபோதும் இருப்பதில்லை. பல கட்சி களுள்ளும் பரவலாக நுழைந்து கொண்டிருப்பார்கள். CPM–CPI போன்ற கட்சிகளைப் பார்த்தால் இவ்வுண்மை தெரியும்.

காந்தியின் படுகொலையைப்பற்றி முன்னமேயே, சேதி அறிந் திருந்த R.S.S. காரர்கள் காந்தி கொல்லப்பட்ட (ஜனவரி 30 1948) சில நிமிடங்களுக்குள் இந்தியா முழுவதும் இனிப்புகள் வழங்கி மகிழ்ந்தார்கள். காந்தி படுகொலை செய்யப்பட்ட சேதியறிந்த பொதுமக்கள் மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவி லுள்ள பல சிட்பாவன் பார்ப்பான்களின் வீடுகளுக்கு தீ வைத் தார்கள். R.S.S. காரர்களின் பூர்வாங்க திட்டமென்னவென்றால் காந்தியைக் கொலை செய்துவிட்டு, முஸ்லீம்களின்மீது பழியைப் போட்டுவிடலாம் என்பதேயாகும். அக்கொலையைச் செய்ய தெரிவு செய்யப்பட்ட நாதுராம் கோட்சே, தம் கையில் 'இஸ்மாயில்' என்று பச்சை குத்திக்கொண்டிருந்தார். ஒவ்வொரு முஸ்லீமும், அவசியம் கடைப்பிடிக்கவேண்டிய சடங்கான ''சுன்னத்து'' செய்துகொண்டிருந்தார். கொலைத்திட்டம் நிறை வேற்றப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னாலேயே இவ்வித காரியங்களெல்லாம் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. எனவே, காந்தியை ஒரு முஸ்லீம்தான் கொலை செய்தார் என்று சொன் னால், எடுத்த எடுப்பிலேயே மக்கள் நம்புகிற, யதார்த்த சூழ் நிலையை. உருவாக்கி இருந்தார்கள். உண்மையில், இந்தியாவின் பல்வேறு பாகங்களில் காந்தி கொலை செய்யப்பட்டதைத்

தொடர்ந்து முஸ்லீம்கள்மீது, R.S.S. காரர்கள் பயங்கர தாக்கு தலைத் தொடுத்தார்கள். முஸ்லீம்களின் குடியிருப்புகள்—கடைகள் மற்றும் சொத்துக்கள் R.S.S. காரர்களின் தாக்குதலுக்கு இலக்காயின. உளவுத் துறையினர் காந்தியின் கொலையைப்பற்றி நிச்சயம் தகவலறிந்திருந்தனர். அன்று, இந்தியாவின் உள்துறை அமைச்சராயிருந்த வல்லபாய் பட்டேல் பம்பாய் மாகாணத்தின் உள்துறை அமைச்சராயிருந்த மொரார்ஜி தேசாய் ஆகியோரும் காந்தியின் கொலைத்திட்டம்பற்றி முன்னமே அறிந்திருந்தனர். காந்தியைப் பார்ப்பான்கள் தொண்டையில் சிக்கிய முள்ளாகக் கருதினார்கள். இந்தியாவின் ஆட்சியதிகாரம் பிரிட்டிஷ்காரர் களிடமிருந்து தம் கைக்கு மாறியபின் பார்ப்பான்களுக்கு ''இடையூறாய்''க் கருதப்பட்ட காந்தியை ஒழித்துக்கட்ட முடிவு செய்தனர். இந்தியாவின் உண்மை வரலாறு இனிமேல்தான் எழுதப்பட வேண்டும்.

தமிழ்நாட்டின் பல பாகங்களில் முஸ்லீம் விரோத தாக்குதல்கள் தலைதூக்கின. பீதியுற்ற இஸ்லாமிய மக்கள் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களை அணுகி, தங்களை பாதுகாக்க வேண்டி முறையிட்டுக்கொண்டார்கள். இஸ்லாமிய மக்களின் அபயக் குரலைக்கேட்ட பெரியார் ராமசாமி அவர்களும், சென்னை வானொலி நிலையத்திலிருந்து, காந்தியைக் கொன்றவர் ஒரு முஸ்லீம் அல்லவென்றும்—காந்தி ஒரு பார்ப்பானால் கொல்லப்பட்டார் என்ற உண்மையையும் வானொலிமூலம் தெளிவுபடுத்தினார். பெரியாருடைய வேண்டுகோளுக்குப் பிறகுதான் முஸ்லீம் விரோதத் தாக்குதல்கள் நின்றனவென்று திராவிட கழகத்தினர் கூறுகின்றனர். பம்பாயில், மக்கள் வீர் சவார்க்கரின் வீட்டைத் தாக்கினர். இந்தியாவெங்கும் R.S.S. அலுவலகங்கள் தாக்கப்பட்டன. கோட்சே, R.S.S. காரர் அல்லவென்று நீதிமன்றம் சொன்னபோதிலும் இன்றைக்கும்கூட, R.S.S. காரர்கள் காந்தியைக் கொன்றவர்களென்றக் கறையுடன்தான் காலந்தள்ளுகின்றனர்.

## பார்ப்பனீயத்தைப் பாதுகாக்கும் பாசிஸ்டுகள்

காந்தி கொலைவழக்கில் இரண்டாவது குற்றவாளி சிற்றின்பப் பிரியரான நாராயண ஆப்டே எனும் பார்ப்பன ஆசிரியராவார். வீர் சவார்க்கர் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு, 1966-ல் இறந்தார். கோட்சேவும்—நாராயண ஆப்டேவும், நவம்பர் 15, 1949 அன்று ''அம்பாலா''வில் தூக்கிலிடப்பட்டனர். கோட்சேயின் பிரேரணையை விசாரித்த பஞ்சாப் உயர்நீதிமன்ற

நீதிபதி ''அச்சுருராம்'' அவர்கள், கோட்சே தம் வழக்கிற்காக, தாமே வாதாடினார் என்றார்: கோட்சே அச்சமின்றி வெளிப் படுத்திய உண்மைகளுக்காக அந்நீதிபதி பெரிதும் பாராட்டியிருக் கிறார். நாராயண ஆப்டேவும்—கோட்சேவும் பூனாவிலிருந்து புறப்படும்போது, ஒரு பிரதி கீதையையும்—பிரிக்கப்படாத இந்திய தேசப்படத்தையும்—செந்நிறமான ஒரு R.S.S. கொடியையும், தம்முடன் கொண்டு சென்றனர். பார்ப்பனீயத்தின்பால், அவர் கள் கொண்டிருந்த பக்தியைப் பாருங்கள்! அவர்களுக்கு நாட்டை விட பார்ப்பனீயமே மிகவும் முக்கியமானதாய் இருந்துள்ளது. தூக்குக்கயிற்றை, கழுத்தில் மாட்டி தூக்கிய உடனேயே, நாதுராம் கோட்சே இறந்துவிட்டார். ஆனால், நாராயண ஆப்டே இறப்ப தற்கு சில நிமிடங்களாகியது. தூக்குமேடைக்குப் போகுமுன் அவர்களிருவரும், R.S.S. கோஷங்களை முழங்கினர். பார்ப்பனீயத் தைப் பாதுகாக்க, அவர்தம் உயிர்களைக்கூட தியாகம் செய்ய கவலைப்படவில்லை. இதுதான் உண்மையான பாசிச—(Facist) இனவெறியர்களின் நடைமுறையாகும்.

கோட்சே புத்தகத்தின் முகவுரை, காந்தி மக்களை மடையர்க ளாக்கி கொண்டிருக்கிறார் என்கிறது. ஆம்—நாமும் இக் குற்றச் சாட்டை ஆதரிக்கிறோம். ''காந்தி சமாதிக்குச் (ராஜ்காட்) சென்று, காந்திக்கு அஞ்சலி செலுத்தி உண்மையையும்—சாத் வீகத்தையும் ஏற்பதாய் உறுதி எடுத்து, அதனையே திரும்பத் திரும்ப சொல்லி பஜனை பாடும் நிலை நீடிக்கும்வரை இந்த நாட்டில் மக்களை மடையர்களாக்கும் நிலையும் நீடித்தே இருக்கு மென்கிறார்'' அதாவது சொல்லுக்கும், செயலுக்கும் தொடர் பற்ற வாய்மாலமே காந்தீயம் என்கிறார். ஆம்—காந்தி போர்க் குணமிக்க புரட்சியாளர்களான தலித் மக்களையும், புதுயுகம் காணவிழையும், வேறு போராளிகளையும், மடைமையில் ஆழ்த்தி முடமாக்கிவிட்டார். எனவே, இந்திய விடுதலைப் புரட்சி தாமதிக்கப்பட்டு ஒரு ஐம்பது ஆண்டுகளாவது பின்னோக்கிப் போய்விட்டது. காந்திக்கு நன்றி.

## இந்துயிசத்தின் வன்முறை

ஆனால் R.S.S. காரர்கள் காந்தியைப்பற்றிக் கொண்டிருந்த நிலையை ஏன் மாற்றிக்கொண்டார்கள்? கோல்வால்க்கரின் காலத்தில் மிகவும் நாணயத்தோடிருந்த R.S.S. தலைவர்கள் இன்றைக்குப் பொய்களையே பேச புறப்பட்டுவிட்டனர். இன்று யாராவது காந்தியை விமர்சித்தால் சித்தம் கலங்கிய நாயைப் போல் இந்த R.S.S. காரர்கள் அவ்விமர்சகர்கள்மீது வீழ்ந்து

கவ்விக் கடித்துக் குதற முனைகின்றனர். காந்தியின் புகழ்பாடும் இன்றைய R,S.S. தலைவர்களைப்பற்றி வேறென்ன முடிவுக்கு வருவது? R.S.S. தலைவர்கள் காந்தியின் சாத்வீகத்தை எதிர்த்து போராடியவர்கள் பாலகங்காதர திலகர்—வீர்சவார்க்கர்—மற்றும் நாதுராம் கோட்சே ஆகியோர் காந்தியின் சாத்வீக கொள்கை தான் இந்துகளை கோழைகளாக்கியதென்றும்—உண்மையில் இந்துயிசம் பரிந்துரைக்கிற வன்முறையே உகந்ததென்றும் அவர்கள் கருதினர். இந்துயிசத்திற்கு விளக்கமளித்திருக்கிற இம் ''மேதாவி''களின் கருத்துப்படி, இந்துமதம் ஒருபோதும் வன்முறைக்கு அப்பாற்பட்டதல்லவாம். ஒவ்வொரு இந்து கடவுளும் வன்முறையை அனுசரித்திருக்கின்றனர். இந்த கடவுள்களின் போட்டோக்கள்—அல்லது—பொம்மைகளைப் பாருங்கள். எல்லா விதமான ஆயுதங்களையும் அக்கடவுள்கள் கையிலேந்தியிருப்பதைக் காணலாம். எனவே, கோட்சே சொல்வதுதான் சரியாகும்—காந்தி சொன்னது தவறு என்கின்றனர்.

R.S.S. காரர்கள் உண்மையான இந்து கருத்தியல்பின்படி, எப்போதும் வன்முறையை போதிப்பவர்களாகவும்—வாழ்நடையில் வன்முறையை அனுசரிப்பவர்களாகவும் உள்ளனர். சமீபத்தில் (1983), அஸ்ஸாம் மாநிலத்தில் நடைபெற்ற படுகொலைகளின் போது, பல்லாயிரக்கணக்கான முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகளில் R.S.S.-ன் தலையீட்டையும் சுட்டிக்காட்டி அநேக இந்துகளே R.S.S. காரர்களை இனங்காட்டினர். இந்தியாவில் பல்வேறு பாகங்களில் R.S.S. காரர்கள் நடத்தும் ஊர்வலங்கள் மற்றும் பேரணிகளின்போது லத்திகள்—எரியீட்டிகள்—மற்றும் கூர்வாள்களின் சகிதம் அவர்கள் அணிதிரள்வதைப் பார்க்கலாம். R.S.S. காரர்கள் வன்முறையாளர்கள் என்பது நாள்தோறும் நாடுமுழுவதிலும் முஸ்லீம் விரோத—கிறிஸ்துவ மக்கள் விரோத—தலீத் மக்கள் விரோத—மற்றும் சீக்கிய மக்களுக்கெதிராக அவர்கள் தூபமிடும் கிளர்ச்சிகளின்மூலம் அறியலாம். R.S.S. அலுவலகங்கள் ஆயுதங்களால் நிரப்பப்பட்டுள்ளன. எனவே, R.S.S.-ம் இந்துமத தத்துவமும் வன்முறையை அடிப்படையாகக் கொண்டதேயன்று பட்டவர்த்தனமாக உண்மையை வெளிப்படுத்திய கோட்சே நிச்சயம், பாராட்டுக்குரியவராவார். இந்து சாத்வீகம் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றை பெரும் விளம்பரங்களின் மூலம் மட்டுமே அறிந்து ஏமாற்றத்திற்காளாகிற மேலை நாட்டவர்கள் இதனைக் கருத்தில் கொள்வதவசியம்.

கோட்சே புத்தகத்தின் முதற்பாகத்தில், தம்மீது தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்கையில் தானொரு வன்முறையாளர்தானென்று ஒளிவு மறைவின்றி ஒத்துக்கொண்டார்.

அவர் ஒரு கைத்துப்பாக்கியை வைத்திருந்தார். தம்மை, காந்திய கொள்கைகளை எதிர்த்த ஒரு (R.S.S.) சிந்தனையாளர் குழுமத்தின் பிரதிநிதியென்றார். அப்புத்தகத்தின் ஏழாவது பக்கத்தில் கோட்சே சொல்கிறார்—''காந்தி பேசும் முழுமையான அகிம்சை இறுதியில் இந்து சமுதாயத்தினரை நிராயுதபாணிகளாக்கி, வேறு சமூகத்தினர் குறிப்பாக முஸ்லீம் சமூகத்தினரின் ஊடுருவல் அல்லது ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்திடும் சக்தியற்றவர்களாக்கி விடுமென நான் நம்புகிறேன் என்றார்.'' இந்துகள்—அல்லது இந்துயிசம் வன்முறைக்கு உட்பட்டதேயென்று கோட்சே கூறியுள்ள இவ்வார்த்தைகள் நாணயமிக்க ஒப்புதல் வாக்குமூலமேயாகும். கீதையில் கண்ணன்கூட வன்முறையையே உபதேசிக்கிறார். பிறகு, இந்துயிசம் சாத்வீகமானதென்று, எப்படிச் சிலர் தவறாகச் சொல்ல முடியும்?

## அம்பேத்கர் தந்த சரியான படப்பிடிப்பு

R.S.S.-ம் கோட்சேவும் காந்தியை ஒரு முஸ்லீம் சார்பாளராகக் கருதினார்கள். ஆனால் முஸ்லீம்களோ காந்தியை ஒரு இந்து தலைவரென்றும்—முஸ்லீம் எதிரியென்றும் கருதினார்கள். டாக்டர் அம்பேத்கர் அவர்களும், காந்தி நல்ல நண்பருமல்ல—நாணயமான விரோதியுமல்ல என்றார். எனவே, டாக்டர் அம்பேத்கர் அவர்களால் வழிநடத்தப்பட்ட தலித் மக்கள் மட்டுந்தான் காந்தியை எதிரியாகக் கருதினார்கள் என்பதல்ல. அதாவது, இந்து இனவெறியர் (நாஜி)கள்—சங்கராச்சாரிகள்—சநாதனிகள்—முஸ்லீம் அல்லாத தலித் மற்றும் கிறிஸ்துவர்களைப் போன்றவர்களும்கூட, அவர்களின் ஈடேற்றத்துக்கு காந்தி குந்தகமானவர் என்று கருதினர். இந்து அல்லாதவர்கள் அவர்தம் முன்னேற்றத்துக்கு காந்தி புறம்பானவரென எண்ணியதற்கான சூழ்நிலையை நாம் புரிந்துகொள்ள முடியும். ஆனால் என்ன பரிதாபம்? இந்துயிசத்தின் காப்பாளர்களே காந்தியை எதிரியென பிரகடனப்படுத்தினார்களே! இந்துயிசத்திற்கு காந்தி எவ்வளவோ தொண்டு செய்தப்பின்னும் அத்தொண்டினைப் பார்ப்பான்கள் மதிக்க மறுத்தனர். ஒருவர் பார்ப்பானாய் இருந்தால் மட்டுமே, அவரை பார்ப்பான்கள் தலைவராகயேற்று அங்கீகரிப்பார்களென்பதை இச்செயல்கள் புலப்படுத்தவில்லையா?

பிர்லா மாளிகையில் கோட்சே மேற்கொண்ட முயற்சி (ஜனவரி 20-ல்) பலிக்காமற்போனதால், தில்லியில் அகதிகள் முகாம்களுக்கருகே உலவிக்கொண்டிருந்தபோது ஒரு அகதியிடம் ஒரு கைத்துப்பாக்கியை வாங்கியதாக கோட்சே குறிப்பிடுகிறார்.

வீர் சவார்க்கரோடு தாம் கொண்டிருந்த தொடர்பினைப்பற்றி (பக்கம் 14–ல்) ''வீர் சவார்க்கர் ஒரு பக்திமிகு பார்ப்பான் குடும்பத்தில் பிறந்தவ''ரென்கிறார். R.S.S. இயக்கத்தில் அநேக ஆண்டுகளாக தாம் பணியாற்றியதாய் ஒப்புக்கொள்கிறார். அச்சந்தர்ப்பத்தில் ஒரு நாளிதழைத் தொடங்கி நடத்தச் சொல்லி, தமக்கு வீர் சவார்க்கர் ரூ. 15,000 கொடுத்தாரென்கிறார். அன்றைய 15,000 ரூபாயின் இன்றைய மதிப்பு என்னவாயிருக்கும்? அந்நாளில், வீர் சவார்க்கர் எவ்வளவு வசதியும்—வாய்ப்புமுள்ளவ ராய் இருந்திருக்கவேண்டும்! காந்தி கொலைகாரர்களுக்கு பணம் ஒரு பிரச்சினையாகவேயில்லை. அக்கொலைகாரர்கள் பம்பாயி லிருந்து டெல்லிக்கு விமானத்தில் பறந்து போனார்கள்.

''கோட்சே, காந்திக்கோர் பாடம் புகட்டுவதையே தம் வாழ் நாளின் இலட்சியமாகக் கொண்டிருந்தார். அதோடு, தம் அந்தஸ்திற்கு அவமதிப்பேற்படுகிறபோது ஒரு இந்துகூட எழுச்சிக் கொள்வான்'' என்பதை உலகுக்கு உணர்த்திடுவதுமாகும். (பக்கம் 19). இந்துகள் சகிப்பின்மைக்கு பேர்போனவர்கள். மிகப் புகழ்பெற்ற எழுத்தாளரான நைபால் (Naipaul) அவர்களைப் போன்றோர்கள்கூட தாமொரு இந்துவாகப் பிறந்து—இந்தியனாக வாழ்கின்றபோதும்—இந்துகளின் விமர்சகரென்ற ஒரே காரணத்திற்காக அவருடைய படைப்புக்கள் வேறெந்த இந்திய மொழிகளிலும் இதுவரை மொழிபெயர்க்கப்படவில்லை. ஒரு இந்து எவ்வித விமர்சனத்தையும் பொறுத்துக்கொள்ளமாட் டான். அவன் உண்மையை ஏற்க மறுப்பான். எனவே, கோட்சே கூறியது சரியல்ல. ஒரு இந்துவின் சகிப்புத் தன்மையைச் சோதிக்க அவனை அவமதிக்கவோ—எரிச்சலூட்டவோ தேவையில்லை. இந்து பொறாமையைப்பற்றி விரிவாக அறிய விரும்புவோர் பிரெஞ்சு நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் அபே துபாயிஸ் (Abbe Dubbois) அவர்கள் எழுதிய (The Hindu Customs and Manners) எனும் நூலில் காண்க.

ஆகஸ்டு 15, ''சுதந்திர நாள்'' என்பதை, R.S.S.—இந்து முண்ணணி—இந்து மகாசபா போன்ற இயக்கத்தவர்கள் ஒரு போதும் அங்கீகரித்ததில்லை. வீர் சவார்க்கர் இந்நாளில் R.S.S. கொடியை ஏற்றுவார். தேசியக் கொடியையல்லவென்று கோட்சே கூறுகிறார்.

### சவார்க்கருக்குத் தெரியாதா?

காந்தி, இந்துமத எதிரியென்று கோட்சே தொடர்ந்து வாதிடு கிறார். ஆனால், அதற்கான ஆதாரத்தை அவரெங்கும் புலப்

படுத்தவில்லை. அவர் சார்ந்திருந்த இயக்கக் கோட்பாடுகளின் படி. அவர் பாஸிஸ அடிப்படையில் காந்தியை எதிர்த்திட உறுதி யேற்று இரகசியமாகவும், சர்வாதிகார சிந்தனையோட்டத்திலும், நிகழ்ச்சிகளை நடத்தி அணி அமைத்தார். கோல்வால்கரின் சிந்தனைக்கொத்து (Bunch Of Thoughts) என்னும் நூலில் கோல் வால்கர், இந்தியாவிற்கு ஜனநாயகம் பொருந்தாதென்றும்—R.S.S. ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்டிருக்கவில்லையென்றும் தெளிவாய்க் குறிப்பிடுகிறார். இந்துயிசமும்—ஜனநாயகமும் சேர்ந்தியங்க முடியாது.

கோட்சேயின் நடவடிக்கைகளனைத்தையும், கோட்சே வீர் சவார்க்கருக்கு தெரியப்படுத்திக் கொண்டிருந்தார். ஆயினும் கோட்சே காந்தியைக் கொல்ல திட்டமிட்டது வீர் சவார்க்கருக்கு தெரியாதென்கிறார். பம்பாயில் உள்ள வீர் சவார்க்கர் வீட்டில் தான் ஜனவரி *14, 1948* (Freedom At Midnight Pages 383—384) காந்தியைக் கொன்றிட சதித்திட்டம் உருவாகியதாய் போலீஸ் குறிப்புகள் நிரூபிக்கின்றன.

R.S.S. இயக்கத்திற்கு அப்பாற்பட்ட மொரார்ஜி தேசாய்—வல்லபாய் பட்டேல் போன்ற காங்கிரஸ்காரர்களுக்கு இக்கொலை பற்றி முன்னமேயே தகவல் தெரிந்திருக்கிறபோது R.S.S. தலைவர்களுக்கு தெரியாமல் இருந்திருக்க முடியுமா? ஒருவேளை வீர் சவார்க்கரை மரணத்திலிருந்து தப்புவிக்க கோட்சே இந்நிலையை மேற்கொண்டிருக்கலாம். ஆட்சியில் அமர்ந்திருந்த பார்ப்பான் தலைவர்களும்—போலீஸ் துறையும் வீர் சவார்க்கரின் உயிரைக் காப்பாற்ற பெரும்பாடு பட்டனர். காந்தி கொலை வழக்கு ஸ்தம்பித்து நின்றது. போலீஸ் துறை திறம்பட ஒத்துழை யாமையை செய்தது. பொறுப்பை தட்டிக்கழித்து தப்பித்துக் கொள்ள R.S.S. சிம்மப்பிரயத்தனம் செய்தது. அதையே விரும்பி நீதிபதிகளும் R.S.S.காரர்களுக்காக வேண்டியதைச் செய்தனர்.

மீண்டும். இந்துக்களிடையே வன்முறை என்பதை பற்றி கோட்சே சொன்னவற்றைப் பார்ப்போம். வன்முறைக்கு ஆதார மாக கோட்சே மிகச் சரியான ஆதாரங்களை முன்வைக்கிறார். அவருடைய கருத்துக்கு, வலிமை சேர்க்கும் வகையில் இந்துமத நூல்கள்—புராணங்கள்—மற்றும் இதிகாசங்களிலிருந்து இந்துக் கடவுள்களே மேற்கொண்ட பல்வேறு வன்முறை நிகழ்ச்சிகளைக் கோர்த்து—அடுக்கி நிரூபிக்கிறார். கோட்சேயினுடைய உள் ளார்ந்த கருத்து என்னவென்றால், பார்ப்பனியத் தத்துவம் எப் போதும் வன்முறையையே சார்ந்து இருப்பது என்பதாகும். கோட்சேயின் கருதுப்படி சிவாஜி—இராணா பிரதாப்சிங்—மற்றும் குருகோவிந் சிங் ஆகியோர் 'திசைமாறிய தேசியவாதிகள்' என்று

சொன்ன காந்தி நெளிவு, களிவுடன் உலவிய நேர்மையற்ற வஞ்சனையாளர் என்பதேயாகும். (இச்சிறிய பிரதி எழுதப்படும் இவ்வேளையில் சீக்கியர்களின் வல்லாண்மைமிக்க தலைவர் சந்த் பிந்தரன்வாலே, குருகோவிந் சிங் அவர்களை, காந்தி கொச்சை படக் கூறியதை கண்டித்திருக்கிறார். (Sunday May 15, '83) சந்த் பிந்தரன்வாலே மேலும் குறிப்பிடுகையில், காந்தி தேசப்பிதா என்பதை சீக்கியர்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்களென சொல்லியிருக்கிறார்.

இந்துயிசம் பெரிதும் பொறாமை குணங்களைக் கொண் டுள்ளது. அதிலும், ஏற்றத் தாழ்வின் அடிப்படையிலான சமூக நிலையைப் பராமரிக்கும் சம்பவங்களில் பெரிதும் பொறாமை பொதிந்து கிடப்பதைப் பார்க்கலாம். பார்ப்பானுக்கு அடிபணிகிற வர்களையும், அடங்கிப் போகிறவர்களையும் மட்டுமே இந்துயிசம் பொறுத்துக்கொள்ளும். அவ்வித குணங்களினின்று எதிர்த்து நிற்பவரை இந்துயிசம் கடவுளின் பெயரால் அழித்தொழித்து விடும். கீதையைப் பாருங்கள். கீதை பொருள் முதல் வாதிகளுக் கெதிரான வன்மத்தை போதிக்கிறது. அவர்களை கொடிய பிசாசுகள் எனச் சித்திரிக்கிறது (அருண் ஷோரியின், இந்துயிசம்—பக்கம்—362).

## பொதுவுடைமைப் பார்ப்பான்களும் R. S. S. பார்ப்பான்களும்

இந்தியாவில் இரண்டு அணியினருக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு போராட்டமே, சோஷலிச பார்ப்பான்களுக் கும்—R. S. S. பார்ப்பான்களுக்குமிடையிலான ஒரு போராட்ட மாகும். பார்ப்பான்களின் இரண்டு அணிகளில், திரிபுவாத பிற் போக்கு பார்ப்பான்களின் அணி R. S. S. தலைமையிலும்—முற் போக்கு பொதுவுடைமை சோஷலிசப் பார்ப்பான்கள் ஈ. எம். சங்கரன் நம்பூதிரிபாட் போன்ற மார்க்சிஸ்டுகள் மற்றும் இந்திரா காந்தி போன்றோரின் தலைமையிலும் களத்திலுள்ளன. இவ்விரு அணியினருக்கிடையேயான போராட்டம் பிற்போக்கு சக்திகளும் கும்—முற்போக்காளர்களுக்குமிடையே நடைபெறுகிற போராட்ட மென்ற சாயம் பூசப்படுகிறது. வெகு மக்களை ஏமாற்றிட பல் வேறு பொதுவுடைமை அமைப்புகள் உருப்பெற்றுள்ளன. அவ்விரு அணியைச் சார்ந்த பார்ப்பான்களும், சூத்திரர்கள் மற்றும் தலித் மக்கள் வாழ்நிலையில் அவர்கள் இருந்த இடத்திலேயே அமிழ்ந்து கிடக்கச் செய்ய ஒரே சிந்தனையுடன் செயல்படுகின்றனர். இன்றிருக்கிற சமுதாய அமைப்பு நீடித்து நிலவிட அவ்விரு அணி யினரும் ஒரே சிந்தனையுடையவர்களாகவே இருக்கின்றனர்.

பார்ப்பான்கள் மட்டுமே அரசாள வேண்டும் என்ற ஒரே நிலையை அவ்விரு அணியினரும் பராமரித்து வருகின்றனர். அவர்கள் இதனைச் சொல்ல வேண்டுமென்பதில்லை. அவர்களுடைய செயல்களே இதற்கு சாட்சியாய் உள்ளன. கோட்சேயின் புத்தகத்தில் (பக்கம்—30ல்) கோட்சே முன் வைத்திருக்கிற வாதம் இ (ந) ம், முடிவை உறுதிப்படுத்துகிறது. கோட்சே சொல்கிறார், ''பிரிட்டீஷாரின் ஆதரவுடன் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய ஒரு கும்பல் தம் சுய தேவைகளுக்காக காந்தியின் மரணத்தைப் பயன்படுத்திக்கொள்ள முயல்கிறது. ஆனால், வரலாறு அவரவர்களுக்குரிய புகழிடத்தையே வழங்கிடும்.''

மேலே, ''கும்பலெ''ன்று கோட்சே குறிப்பிடுவது, இந்திரா காந்தியின் தந்தையும் காஷ்மீர் பார்ப்பானுமான ஜவஹர்லால் நேருவையேயாகும். நேருவின் பார்ப்பனீய குணங்களையும் நாமறிந்திருக்கிறோம். இந்தியா பார்ப்பான்களின் ஆளுமைக்குள்ளிருக்க வேண்டுமென்பதைப் பொறுத்தமட்டில், R. S. S. காரர்களுக்கும்—நேருவுக்கும் எந்த கருத்து வேறுபாடும் கிடையாது. நேரு—இந்திரா காந்தி ஆகியோரிடையிலான கருத்து வேறுபாடு, இந்திரா காந்தி மற்றும் R. S. S. காரர்களுக்கிடையான கருத்து வேறுபாடு கொள்கையடிப்படையிலானதல்ல. தனிப்பட்ட முறையிலானதாகும். மேலெழுந்தவாரியாக, இவ்விரு அணிகளும் எதிரணிகள் போலத் தோன்றும். இது மக்களை ஏமாற்றும் ஒரு மார்க்கந்தான். இவ்விரு அணிகளுமே இந்தியா என்றென்றும் பார்ப்பான்களின் ஏகபோக ஆளுமைக்குள் நிலைத்திருக்க வேண்டுமென்ற கருத்தினை உறுதியாய்க் கொண்டிருக்கின்றன.

### சோஷலிசப் பார்ப்பான்கள் போட்ட திட்டம்

நேருவின் தலைமையிலான சோஷலிச பார்ப்பான்கள் இந்தியாவை கூறுபோடுவதில் முனைப்பாய் இருந்தனர். ஏனெனில் இந்தியாவின் வடக்கில் திரளாய் குழுமியிருந்த முஸ்லிம் மக்களைப் பிரித்து ஒரு தனிநாடு ஏற்படுத்தி அனுப்பிவிட்டால், இங்கே சிதறிக் கிடக்கிற தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மீது முரட்டு சவாரி செய்ய வாய்ப்பு இருக்குமென அவர்கள் கருதினர். நாட்டுப் பிரிவினையை தொடர்ந்த நிகழ்ச்சிகள் நேருவின் தலைமையிலான சோஷலிச பார்ப்பான்கள் மேற்கொண்ட நிலை சரியானதென்றும் பிற்போக்கான R. S. S. பார்ப்பான்கள் மேற்கொண்ட நிலை தவறென்றும் புலப்படுத்தின. பிரிட்டிஷ்காரர்கள் ஆண்ட இடத்தை பார்ப்பான்கள் அடைந்தனர். அப்பார்ப்பான்களின் ஆட்சி, பிரிட்டிஷ்காரர்களின்

ஆட்சியைவிட வன்கொடிய ஆட்சியாகும். பார்ப்பான்களின் ஆட்சிக்காலந்தொட்டு இந்தியாவில் தலித் மற்றும் பிற்படுத்தப் பட்ட மக்கள் மீதான ஒடுக்குமுறைத் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. பார்ப்பான்களின் ஏகாதிபத்தியம் இன்று உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. (மேலும் விவரங்கள் அறிய சுவாமி ஆனந்த தீர்த்தாவின் Hindu Imperialism எனும் நூலை படியுங்கள்).

முஸ்லிம்களையும்—கிறிஸ்தவர்களையும் எதிர்த்திட இந்துகள் ஆயுதமேந்தவேண்டுமென்ற R. S. S.-ன் தீர்மானத்தை கோட்சே குறிப்பிடுகிறார். இங்கு ஓர் ஐயம் எழுகிறது. இந்துகள் ஆயுதமேந்திகளாகி விடுவது எப்படி? முதலில், இந்துகள் போரிடும் வீர பாரம்பரிய இனத்தவர்களல்ல. சீனாவை எதிர்த்த போரில் (1962) இந்த இந்துகள் சந்தித்த பின்னடைவு நம் நெஞ்சத்தில் பசுமைமிகு நினைவுகளாய் இருக்கின்றன. இரண்டாவதாக ஜாதி அடிப்படையில் பிளவுபட்டுக் கிடக்கிற இந்துகள் ஒன்றிணைந் திடவே முடியாது. உண்மையில், போர்க்குணமிக்கவர்களான தலித் மற்றும் மலைவாழ் மக்கள் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படாமல் நிராயுதபாணிகளாக உள்ளனர். வேறொரு வீர மரபினரான சீக்கியர்கள் இந்து எதிரிகளாகிவிட்டனர். இந் நிலையில் இந்துகளை ஆயுதமேந்திகளாக்கிடக் கூடுமா? அவசர கால ஆட்சியின்போது தீரமிக்கவர்கள் R. S. S. காரர்கள் என்பது முற்றிலும் பிரமையே என்பது நிரூபணமாகிவிட்டது. R. S. S. தலைவர் பாலா சாஹெப் தியோரஸ் மற்றும் நூற்றுக்கணக்கான R. S S. காரர்கள் அரசிடம் மண்டியிட்டு, மன்னிப்பு கேட்டு, இந்திராவின் காலில் விழவும் தயாரென்று எழுதிக்கொடுத்து சிறையில் இருந்து விடுதலை பெற்றாலே போதுமென்று சர ணடைந்தனர். கோழைகளை உள்ளடக்கிய ஒரு தேசம் வாளெடுத்து போரிடுவது எங்ஙனம்?

### ‘பெரும்பான்மை’யும் ‘சிறுபான்மை’யும்

காந்தி பிரித்தாளும் காரியத்தைச் செய்தாரென கோட்சே காந்தியின்மீது குற்றஞ்சாட்டுகிறார். பிரிக்க முடியாத அளவுக்கு பின்னிப் பிணைந்திருக்கிற ஒரு மக்கள் சமுதாயத்தை வேறொருவர் பிரித்திடுவதெங்ஙனம்? இந்து மத ஜாதி அடிப் படையே இந்துகளைத் துண்டாடி கூறுபோட்டுள்ளது. அதுவே இந்துகள் விரும்பிப் பிளவுண்டு கிடப்பதற்கும் காரணமாகும். இந்தியாவில் இந்துகள் சிறுபான்மையினராகிடும் அச்சமுள்ளதென ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் அவ்வப்போது பேசித் திரிகின்றனர்.

அவர்களுடைய அச்சம் உண்மையானதே! தலித் மக்களும் திராவிடர்களும் 10 சதமேயுள்ள ஆரிய வந்தேறிகளிடம் சிக்குண்ட அடிமைத்தனத்தை உணர்ந்துகொள்ளும் மாத்திரத்திலேயே இந்த இந்துகள் சிறுபான்மையினராகிடுவர். வெகு சீக்கிரத்தில் இது நடக்கத்தான் போகிறது. நாடெங்கிலுமுள்ள தலித் மக்கள் தாம் இந்துகளல்லவென்று ஏற்கெனவே பிரகடனப்படுத்திவிட்டார்கள். சீக்கியர்களும் இந்துகளுடனான உறவை முற்றிலும் முறித்துக் கொண்டார்கள். பல்வேறு இன மக்களும் இவ்வழியைப் பின் தொடர்வார்கள். பிறகு இந்த 'இந்து'கள் சிறுபான்மையினராக ஆகத்தான் போகிறார்கள்.

இந்தியா பிளவுபட்டதற்கு காந்தியே பொறுப்பென்கிறார் கோட்சே! ''காந்தி உயிரோடு உலவிடுவதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க (பக்கம் 40) வேண்டும். காந்தி ஒரு பொய்யர்—காந்தி ஒரு படுதோல்வியாளர்—காந்தி ஒரு பேரழி வாளர்'' (பக்கம் 41) என்ற கோட்சேவின் கருத்தை நாம் ஏற்கிறோம். காந்தி கண்ட மிகப் பெரிய வெற்றிகரமான செயல் இந்து மவுடீகங்களையெல்லாம் 'கதர்' போட்டு மறைத்து காந்தி குல்லாயில் மூடி கவுரவ முத்திரைக் குத்திக் கொண்டதைத் தவிர வேறல்ல. வரலாற்றுச் சுவடுகளில் காந்தி ஒரு மாபெரும் தோல்வியாளர் எனக் காணக் கிடக்கிறது.

காந்தி மட்டும் குறுக்கிடாமற்போயிருந்தால் இந்திய விடுதலைப் போர் என்பது வெகு மக்களின் சமூக—பொருளாதாரப் போராட்டமாய் வடிவெடுத்து புரட்சிக்கு வித்திட்டிருக்கும். அதைத் தொடர்ந்து அரசியல் சுதந்திரமும் அடைந்திருக்கக்கூடும். ஆனால், எப்போதெல்லாம் வெகு மக்கள் சமூக—பொருளாதார சீரமைப்புகளுக்காகப் போராடினார்களோ அப்போதெல்லாம்—மோகன்தாஸ் காந்தி முட்டுக்கட்டையாய் இருந்தார்.

### காந்தி ஒரு திரிபுவாதியா?

இந்தியாவில் உண்மையான ஒரு புரட்சித் தோன்றாமல் தடுத்திடும் திரிபுவாதியின் பணியை காந்தி மேற்கொண்டார். ஜி. டி. பிர்லா போன்ற ஏகபோக முதலாளிகள் காந்தியின் இவ்விதத் திரிபுவாத நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை மிக நன்கு அறிந்திருந்தனர். அதனால்தான் காந்தியின் தலைமையிலியங்கிய காங்கிரஸ் இயக்கத்திற்குப் பணமுதலீடு செய்தனர். இப்படிப் பல்வேறு முதலாளிகள் காந்திக்குப் பணத்தை அள்ளிக் கொடுத்தனர். காந்தி முஸ்லிம் மக்களுக்காகக் காட்டிய நேசம், முஸ்லிம் மக்களிடையே அற்பமான மரியாதையை வென்றிடவும் அவர்

கொண்டிருந்த வர்ண—வர்க்க அந்தஸ்தைப் பராமரிப்பதற்குமே யன்றி வேறல்ல. முஸ்லிம் மக்கள்மேல் காந்தி காட்டிய பாசம் உண்மையான பாசமென்று முஸ்லிம் மக்கள் ஒருபோதும் நம்பிய தில்லை. தலித் மக்களாகிய நம்மை எதிர்த்திட காந்தி முஸ்லிம் மக்களின் ஆதரவைக் கோரினார். முஸ்லிம் மக்களோ (வட்ட மேஜை மாநாட்டின் (1931) போது) காந்தியின் சதித் திட்டத் திற்கு ஒத்துப்போக மறுத்திட்டனர்.

அக்டோபர் 5, 1931 இலண்டன் நகரில் நள்ளிரவில் காந்தி முக்காடிட்டு கையில் ஒரு 'குரான்' பிரதியை எடுத்துக்கொண்டு முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்து தலித் மக்களுக்கெதிராக ஓர் உடன்படிக்கைக்கு வழிகண்டிட முயன்று தோற்றார். இந்து பெரும்பான்மை ஆதிக்கத்திலிருந்து விடுபட தம் சமுதாய மக்களுக்கு விசேஷ உரிமைகள் கோரி 14 அம்ச கோரிக்கைகளை முன் வைத்து, ஆங்கில அரசு அதனை ஏற்க வலியுறுத்தி வந்த முஸ்லிம் பிரதிநிதிகள் ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் சமுதாய விடுதலைக் கோரிக்கைகளுக்கெதிராக காந்தி செய்யத் துணிந்த துரோகத்துக்குத் துணை போக மறுத்திட்டனர். பல்லாயிர மாண்டுகளாய்ப் பரிதவிக்கும் தலித் மக்கள் மீண்டும் படுகுழியில் தள்ளப்படாமல் பாதுகாத்த முஸ்லில் பிரதிநிதிகளின் பெருஞ் சிறப்பினை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வியந்து பாராட்டு கிறார்கள். (Pages 71,295–*What Congress and gandhi have done the untouchables?* 1945 Rs. 30.).

இந்துகளும் முஸ்லிம்களும் சகோதரர்களேயென்று பிதற்றித் திரிந்ததைத் தவிர, காந்தி அச்சகோதரத்துவ கட்டுமானப் பணிக்கு உருப்படியாக எதையும் செய்யவில்லை. இந்தியாவும்—பாகிஸ்தானும் பிரிந்துபோவதை காந்தி தடுக்க முடியவில்லை யென்பது மட்டுமல்ல, இந்தியாவுக்குள் முஸ்லிம்களுக்கெதிராக இந்துகள் மேற்கொண்ட ஒடுக்குமுறைகளையும் காந்தியால் தடுக்க முடியவில்லை. கால ஓட்டத்தில் நாள்தோறும் இவ்வொடுக்கு முறைகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

இன்றுள்ள சூழ்நிலையில் பார்ப்பனீயம் நீடிக்கும் வரை இந்தியாவில் முஸ்லிம்களும்—கிறிஸ்துவர்களும்—சீக்கியர்களும் ஒரு தனி தேசிய இனமாகவே நடத்தப்படுவார்கள். முஸ்லீம் விரோதப் பிரச்சாரங்களின் மூலமே ஆர்.எஸ்.எஸ். காரர்கள் இந்து ஒற்றுமை ஓங்குக எனும் கோஷத்துடன், இந்து இனவெறி யர்களின் இரத்தப் பசியைத் தீர்க்க முடியும். ஜாதிய அடிப்படை யில் பிளவுபட்டுக் கிடக்கிற இந்துகளை, முஸ்லிம் விரோத மந்திரத்தை ஜெபிக்காமல் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் ஒன்றிணைத் திடுவதெப்படி? எனவேதான், ''முஸ்லீம்களின் பிரச்சினை ஒரு

முடிவற்ற பிரச்சனையாக நீட்டிக்க வேண்டும். முஸ்லிம்கள் எதிரிகள்—தேச விரோதிகள்'' என்று தொடர்ந்து கூக்குரலிடு வதின் மூலம், அடிப்படையில் ஒடுக்கப்பட்டிருக்கும் உழைப்பாளி கள் மற்றும் தலித் மக்களின் கவனம் திரும்பிவிடாமல் சவாரி செய்யலாமென ஆர்.எஸ்.எஸ். காரர்கள் திட்டமிட்டுச் செயல்படு கின்றனர். நாட்டில் அன்றாடம் நடைபெறும் ஜாதி—மத அடிப் படையிலான போராட்டங்களின் பின்னணியாயுள்ள சதித் திட்டம் இதுவேயாகும். இதைத்தான் நாம் ஏற்கெனவே வெளி யிட்டுள்ள ஒரு புத்தகத்தில் சூத்திரர்கள்—தலித் மக்கள் ஆகியோர் ஒருபோதும் பார்ப்பான் தலைமையை ஏற்கமாட்டார்கள்—அத் தலைமையைத் தகர்த்திட எதிர்த்துக் கிளர்ச்சி செய்வார் களெனக் குறிப்பிட்டோம். அவ்விதக் கிளர்ச்சி நிகழ்ந்திடாம லிருக்கத்தான் போலியான ஒரு எதிரியை கற்பனையில் உருவாக்கிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் வெகு மக்கள் மீதான பார்ப்பான்களின் தலைமை பாதிக்கப்படாமல் பத்திர மாகப் பார்த்துக்கொள்கிறார்கள். தலித் மக்களும்—சூத்திரர் களும் இந்நாடகத்தை ஊடுருவி அறிந்து—உண்மையை உணர்ந்து பார்ப்பான்களின் மோசடியை அம்பலப்படுத்திடுவரென நம்பு கிறோம்.

## ஒடுக்கப்பட்டோர் காந்தியிசத்தை ஒதுக்கித் தள்ளியதேன்?

காந்தி ஒரு மகானென்பதும்—காந்தியிசம் சமூக மாற்றத்துக் கான கோட்பாடென்பதும் உண்மையானால் இந்தியாவிலுள்ள வறியவர்கள்—ஒடுக்கப்பட்டோர் காந்தியிசத்தை ஏற்றுக்கொள் ளாததேன்? சோவியத் ரஷ்யாவும்—சீனாவும் கூட மகாத்மாக் களைப் பெற்றிருந்தது. அம்மகாத்மாக்களின் தத்துவக் கோட் பாடுகளான லெனினிசமும்—மாவோயிசமும் அந்நாட்டு வெகு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அற்புதமாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அவ்விரு நாடுகளும் முதல் புரட்சியைக் கடந்துவிட்டன. அப்புரட்சிகளைத் தொடர்ந்து சமூக—பொரு ளாதார சீரமைப்பின் வேர்கள் மிக நன்கு பதிந்திருப்பதைக் காண லாம். அவ்விதக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்ட அந்நாட்டு மக்களின் நடைமுறை வாழ்வில் முறையே லெனினிய—மாவோயிச தத்துவங்கள் அம்மக்களுக்கு பெரிதும் பலனளித்திருக்கின்றன வென்று உலகத்தாரிடையே நிரூபிக்கின்றனர். நாம் (1981-ல்) மேற்கொண்ட சீன சுற்றுப் பயணத்தின்போது பெருந்தலைவர் மாவோ அவர்களால் அந்நாட்டில் விளைந்துள்ள அற்புத மாற்றங் களை நேரில் காணமுடிந்தது. எந்தவொரு மக்கள் சமுதாயமும் தம் ஈடேற்றத்திற்கு உகந்ததாயுள்ள கோட்பாட்டுச் சாதனங்

களை ஏற்றுக்கொள்ளுமென்பது இதிலிருந்து தெளிவாகப் புரிய வில்லையா? மக்களுக்கேற்ற அரசு அமைவதுபோலத்தான்—அம் மக்களுக்கேற்ற தலைவர்களும் உருப்பெறுகிறார்கள். சீனத்து மக்கள் மாவோ அவர்களை தலைவராகப் பெற்றிடும் தகுதி யுடனிருந்தார்கள். வக்கறுத்த நாணயங்கெட்ட இந்தியர்களோ காந்தியையும்—அவருடைய பொய்மையான காந்தியிசத்தையும் தத்துவமாய் பெரும் தகுதியைக் கொண்டிருந்தனர். தலைமுறை தலைமுறையாய் ஏய்த்து நம் உதிரத்தை உறிஞ்சிடும் ஏய்ப்பர் களுக்கோர் போர்வையாய் அமைந்திட்டதைத் தவிர காந்தியிசம் எந்த வகையில் இந்தியாவுக்கு உதவிகரமாயிருந்தது? ஆளும் கும்பலின் அட்டகாசத்தை மறைத்திடும் ஓர் இலகுவான கருவியாக காந்தியிசம் ஜீவித்திருக்கிறது. காந்தியிசத்தின் சில அம்சங்கள் பொருளாதார சீரமைப்புக்குகந்ததாய் இருப்பதில் ஐயமில்லை. ஆனால், ஆளும் கும்பலோ, அந்த அம்சங்களில் அக்கறை காட்டுவ தில்லை. ஏனெனில், அவைகள் ஆளும் கும்பலுக்கு நன்மை பயப்பதாயில்லை. இந்தியாவை ஆளும் கும்பலின் பொதுவான பதிலென்னவென்றால், காந்தியிசம் மிக நல்ல கோட்பாடுதான்—அதில் சந்தேகமில்லை. ஆனால், மக்கள் அதனைக் கடைப்பிடிக் காமற்போனால் நாங்களென்ன செய்ய—என்கிறார்கள். நம் முடைய பதிலென்னவென்றால், எந்தவோர் மக்களும் அவர் களுக்கு நன்மையளிக்கிற எந்தவொரு திட்டத்தையும் ஒருபோதும் நிராகரிக்கமாட்டார்களென்பதேயாகும். இதுதான் வரலாறு நமக்குப் புலப்படுத்தும் பாடமாகும். காந்தியிசம் புரட்சிக்கு எதிர்மறையானதென்பதை கண்டுணர்ந்துதான் அதனை மக்கள் நிராகரித்துள்ளார்கள். ஆனால், இந்தியாவை ஆளும் கும்பல் காந்தியிசத்தை ஆரத்தழுவி அணைத்துக் கொண்டுள்ளது. ஏனெனில், அவ்வித எதிர்மறை திரிபுவாதக் கோட்பாடு அவர் களுக்குப் பெரிதும் உதவிகரமாயிருக்கிறது. எனவே காந்தி யிசத்தை நிராகரித்தமைக்காக மக்களை நாம் குறை சொல்ல முடியாது.

## பாகிஸ்தான் பிரிவினை பார்ப்பான்களுக்கே நன்மை

காந்தி திரைப்படம் மற்றும் அவை போன்ற அநேகக் கதை கள் காந்தி நாட்டுப் பிரிவினையை எதிர்த்தாரென்றக் கதையை நம்மைச் சுற்றி வலம் வந்து சொல்லிக்கொண்டிருக்கின்றன. ஆனால், கோட்சே சொன்னதைப் போன்று—வரலாற்று ஆதாரங் களும் உண்மை அதுவல்லவென்பதை புலப்படுத்துகின்றன. கோட்சே சொல்கிறார்–1943-ல் காந்தி உண்ணாவிரதமிருந்த

போது மிக நெருங்கிய நேசத்திற்குரியவர்களைத் தவிர வேறு யாரும் காந்தியைச் சந்திக்க அனுமதிக்கப்படாத சூழ்நிலையில் சி. இராஜகோபாலாச்சாரி காந்தியின் அறைக்குள் பதுங்கிச் சென்று—காந்தியைச் சந்தித்து பாகிஸ்தான் பிரிக்கப்படவேண்டு மென்ற சதித் திட்டத்தைக் கலந்தாலோசித்த பின்னர், அதைப் பற்றி முஸ்லிம் மக்கள் தலைவர் ஜின்னாவுடன் பேச்சுவார்த்தை நடத்த சி. இராஜகோபாலாச்சாரிக்கு காந்தி அனுமதி வழங் கினார்'' (Page–60) என்கிறார். வெற்றுப் புனைகதைகளை படைத்துப் பரப்பிடுவது இந்தியாவில் செழித்து நிலைத்திருக்கும் ஒரு தொழில். காந்தியைப் பற்றிய அபார சங்கதிகளெல்லாம் கூட அப்படிப்பட்ட வெற்றுப் புனைகதைகளேயாகும்.

தென்னிந்திய குள்ளநரியென்றழைக்கப்பட்ட இராஜாஜி தமிழ் நாட்டைச் சார்ந்த அபாரமான சூட்சுமம் நிறைந்த பார்ப்பனா வார். பாகிஸ்தான் இந்தியாவினின்றும் பிரிக்கப்படுவதால் பார்ப் பான்களுக்கு ஏற்படும் அனுகூலங்களை ஆரம்பக் காலத்திலேயே மிக நன்று புரிந்துகொண்டிருந்த சில பேர்களுள் இராஜாஜியும் ஒருவராவார். ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான வைதீகப் பார்ப் பான்கள் நாடு பிரிவதை எதிர்த்தார்கள். ஆனால் நேரு—இராஜாஜி போன்றவர்களின் தலைமையிலான சோசலிசப் பார்ப் பான்கள் ஒன்றிணைந்த இந்தியாவில் ஒடுக்கப்பட்ட நிலையிலுள்ள சூத்திரர்கள் மற்றும் தலித் மக்களின் பெருகிவரும் எழுச்சி யார்வத்தினை தடுத்திடுவதும் பார்ப்பான்கள் தொடர்ந்து கோலோச்சுவதும் பெரும் சிரமமென்பதை அறிந்திருந்தனர். தாழ்ந்த ஜாதியைச் சார்ந்த போராளிகள் கிளர்ச்சியிலீடுபட்டு, அக் கிளர்ச்சி கட்டுக்கடங்காமற்போனால் அவர்கள் தம்மைப்போன்று பாதிப்புக்குள்ளான முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களோடு ஒன்றிணைவது நிச்சயம். ஏனெனில், இவ்வகைப்பட்ட மக்களனை வரும் இந்து எனும் பொது எதிரியால் பாதிப்புக்குள்ளானவர் களாவர். அப்போதுதான் வெளியாயிற்று; டாக்டர் அம்பேத் கரின் 'PAKISTHAN OR PARTITION OF INDIA' என்ற புத்தகம். அப்புத்தகத்தை படித்த சோசலிசப் பார்ப்பான்கள் விழித்துக்கொண்டனர். முஸ்லிம்களை இந்தியாவிலிருந்து பிரித் திடாவிட்டால் இந்தியாவிற்குள் பார்ப்பான்களின் ஆதிக்கத்திற்கு பேராபத்தென சோசலிசப் பார்ப்பான்கள் திடமாய் நம்பினர். மக்கள் தொகையில் 5 சதத்திற்கும் குறைவாயுள்ள பார்ப்பான் களால் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து கொதித்தெழுந்தால் அப்பிரளயத்தை தடுத்திடுவது நிச்சயம் இயலாதென்றும், தலித் மக்கள், முஸ்லிம் மற்றும் கிறிஸ்துவர்களின் உதவியோடு போர் தொடுத்தால் கட்டுப்படுத்தமுடியாத காட்டாற்று வெள்ளமாகிடு மெனவும் கருதினர். இதைப் படிக்கின்ற சில பார்ப்பான்கள்

எரிச்சலடையலாம். அதிருப்தியை வளர்க்கிறோம்—வித்தியாசத்தையேற்படுத்துகிறோம் என்று கூறி நம்மீது அவதூது வழக்குகள் கூடத் தொடுக்கலாம். வன்முறையைத் தூண்டிடுவதாகக்கூட அவர்கள் குற்றஞ்சாட்டலாம். அவ்விதப் பார்ப்பான்கள், இந்தியாவில் எம். என். ராய்—டி. டி. கோசாம்பி—கோரா—டாக்டர் ஏ. ஆர். தேசாய் போன்ற எவ்வளவோ பார்ப்பான்கள் தம் ஜாதிப் பற்றுக்கும் மேலே உயர்ந்து—மக்கள் மத்தியில் மரியாதையைப் பெற்றிருப்பதைக் கவனிக்கவேண்டும். எனவே, நாம் மேலே குறிப்பிட்டவைகள் பொருந்தினால் போட்டுக் கொள்ளும் தொப்பியைப் போன்று சந்தர்ப்பவாத—மதவெறிப் பிடித்த—தற்குறிப் பார்ப்பான்களுக்கேயாகும்.

ஆதலால்தான், நாம் சோஷலிசப் பார்ப்பான்கள் பேராபத்தானவர்களென்கிறோம். ஆர். எஸ். எஸ். பார்ப்பான்கள் நம்மெதிரிலுள்ள விரோதிகள். ஆனால், சோசலிசப் பார்ப்பான்களோ ஒளிந்திருக்கிற எதிரிகள் பதுங்கியிருக்கிற எதிரியே எப்போதும் பேராபத்தானவன். வெளிப்படையாய் தெரிகிற விரோதியை நாம் பார்க்க முடிகிறது. அவன் நடவடிக்கைகளையும் அறிய முடிகிறது. ஆனால் பதுங்கியிருக்கிற எதிரியோ நண்பனென்ற போர்வையில் நம்மோடு கூடிக் குலவிடுவான். சரியான நேரத்தில் குழிபறிக்கத் தயங்கமாட்டான். இப்படி சோசலிசப் போர்வையில் பதுங்கியுள்ள எதிரிப் பார்ப்பான்களிடம்எச்சரிக்கையாயிருப்பதவசியம்.

இந்தியா பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகள், இந்தியா பிரிக்கப்படாமல் அந்த முஸ்லீம் மக்களும் நம்மோடு இருந்திருப்பார்களேயானால்—தலித் மக்களாகிய நமக்கு அச்சூழ்நிலை எவ்வளவு உபயோகமாய் இருந்திருக்குமென்று எண்ணத்தூண்டுகிறது. தலித் மக்களாகிய நாமும், சூத்திரர்களும்—முஸ்லீம் கிறிஸ்துவ—சீக்கிய சிறுபான்மை மக்களும் இம் மூர்க்கத்தனமான எதிரிக்குச் சரியான பாடம் புகட்டும் போராட்டத்தை நடத்தியிருப்போம். என்ன துரதிருஷ்டம்? ‘‘அந்தப் பிரிவினை’’ நம் இதயத்தின் ஆழத்திலிருந்து கனன்று வெளியாகும் ஒடுங்கிய குரலின் ஓசையைத் தடுத்து, ஒடுக்கப்பட்ட முஸ்லிம்களின் அடங்கிய குரலை மேலும் அடைத்து பேசவே முடியாதவர்களாக்கி விட்டதே! இந்தியாவிலுள்ள முஸ்லீம்களுக்கும்கூட அந்த பிரிவினை துயரத்தையே அளித்துள்ளது. இந்துகள் முஸ்லிம்களை முற்றிலும் மாறுபட்ட தேசிய இனமாகக் கருதி தொடர்ந்து முஸ்லிம் மக்கள்மேல் மேற்கொள்ளும் தாக்குதல்களில் நூற்றுக் கணக்கான முஸ்லிம் மக்கள் கொன்று குவிக்கப்படுவதை இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் எவ்வளவு காலத்திற்குதான் பொறுத்துக்

கொண்டிருப்பார்களோ தெரியவில்லை. இந்தியாவிலுள்ள முஸ்லிம் மக்கள் (100 மில்லியன்) வேறொரு தனி வாழிடம் கோரினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்தியாவில் அவ்வித கோரிக்கைகள் எழுவதில் வியப்பொன்றுமில்லை. தலித் மக்களாகிய நாம் தலித்ஸ்தான் கேட்கிறோம்—மலைவாழ் மக்கள் ஜார்கண்ட் எனும் தனிவாழிடம் கேட்கிறார்கள்—சீக்கியர்கள் பல்லாயிரமவர் காலிஸ்தான் கோரி, அப்போராட்டத்தில் தம் இன்னுயிரை ஈந்து வருகின்றனர். அந்தச் சூழ்நிலையில் படுமோசமான வன்கொடுமைக்கு இலக்காகும் முஸ்லிம் மக்களின் தீர்வுக்குப்போராடும் உரிமை அவர்களுக்குண்டு.

## வெளிவராத ரகசியங்கள்

நடந்தவை—நடந்தவைகளாகவே இருக்கட்டும். இந்திய பிரிவினைக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் இரகசியங்களை இந்திய வரலாற்றாசிரியர்கள் இன்றும் வெளிப்படுத்தவேயில்லை. இந்தியாவில் வரலாற்றாசிரியர்கள் எனப்பட்டவர்களும்—ஆறாம் வர்க்கத்தைச் சார்ந்தவர்களாகவே இருப்பதால், அவர்கள் உண்மையை வெளிக்கொணர்வார்களென்று நாம் எதிர்பார்க்க முடியாது. நம்முடைய நாட்டின் வரலாற்றை நாமே எழுதுகிற நிலை வரும்போது இந்த பிரிவினை நாடகத்திற்குப் பின்னால் மறைந்து கிடக்கும் சூழ்ச்சிமிகு பார்ப்பான்களின் செயலை நம்மவர்கள் அம்பலப்படுத்தாமல் அமைதியாய் இருப்பார்களோ? இருளில் பதுங்கியிருக்கும் ஜவஹர்லால் நேரு—இராஜகோபாலாச்சாரி மற்றும் காந்தி போன்றோரின் கபட நாடகங்கள் கட்டாயம் அரங்கேறும்—அம்பலப்படுத்தப்படும். இவற்றிலிருந்து ஒரு உண்மை தெளிவாக புலப்படுகிறது. அதாவது, முஸ்லிம் மக்கள் ஆரம்பத்தில் பாகிஸ்தானைப்பற்றி அவ்வளவாய் அக்கறைக் கொண்டிருக்கவில்லை. பாகிஸ்தான் பற்றிய கோரிக்கையின் கர்த்தா ஜின்னா அல்ல. பாகிஸ்தான் பிறப்பதற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன் அதாவது, 1940-ல் தான் பாகிஸ்தானைப்பற்றி ஜின்னா சிந்திக்கத்தொடங்கினார். அவ்வித யோசனை சோஷலிசப் பார்ப்பான்களுக்கு சொர்க்கத்தை அடைந்திடும் மார்க்கமாய் தெரிந்ததென்ற உண்மையை வெளிப்படுத்தியதற்காக கோட்சேவை நாம் பாராட்டுகிறோம்.

வேறொரு உண்மையையும் உடைத்து சொன்னதற்காக கோட்சேவிற்கு நாம் நன்றி சொல்கிறோம். கோட்சே சொல்லுகிறார், "காந்திதான் இந்தியாவின் சுதந்திரத்தை வென்றெடுத்

தார் என்று பேசுபவர்களெல்லாம் நன்றி கெட்டவர்கள் மட்டு மல்ல, வரலாற்றை உண்மைக்கு புறம்பாக எழுத முயற்சிப்பவர் களுக்கு துணை போகும் பாவத்திற்குமுரியவர்களாவார்கள்.''

## ஆட்சி மாற்றத்தால் சுரண்டல் ஒழிந்ததா?

இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு வெளி யேற பிரிட்டீஷ்காரர்கள் விரும்பிய வேளையில் பிரிட்டீஷ் அரசு தொழிற்கட்சிகாரர்களின் கைக்கு மாறியது. இங்கிலாந்தில் நடைபெற்ற அந்த அரசியல் ஆட்சிமாற்ற நிகழ்ச்சி இந்தியாவில் அரசு அதிகார மாற்றம் பார்ப்பான்கள் கைக்கு மாறுவதை துரிதப் படுத்தியது. அதற்கும் மேலாக கிறிஸ்துவ கோட்பாடுகளின்படி மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கொள்ளுதல் அவசியமென்று ஆங்கிலேயர்கள் கருதினர். இங்கிலாந்து தேசத்தவர்கள் வெறும் கிறிஸ்துவர்கள் மட்டுமல்ல. அவர்கள் சீர்திருத்த கிறிஸ்துவர்கள். இந்திய விடுதலை கோரிக்கையை அவர்கள் இரக்கத்துடன் அணுகி னர். ஆனால், அந்த 'சுதந்திர'த்தின்மூலம் இந்தியாவில் உள்ள தலித் மக்கள் அடைந்த அனுகூலம்தான் என்ன? அந்நிய ஆங்கிலே யர்களின் சுரண்டலுக்குப் பதிலாக அந்நிய ஆரிய சுரண்டல்காரர் களுக்கு ஆட்பட்டிருக்கிறோம். முதன் முதலில் இந்தியாவிற்குள் நுழைந்த அந்நியர்கள் ஆரியன்களேயாவர். முதலில் வந்தவர்கள் முதலில் வெளியே போகவேண்டுமென்ற முறை கடைபிடிக்கப் பட்டால் இந்தியாவின் முதல் வந்தேறிகளான ஆரியன்கள்தான் முதலில் வெளியேற்றப்பட்டிருக்கவேண்டும். எனவே இன்று நாடாளும் அந்நியர்களான ஆரியன்கள் பிரிட்டீஷ்காரர்களை அந்நியர்கள் என்பது பொருந்தாது. அந்த அந்நியர்களான ஆங்கிலேய சுரண்டல்காரர்கள் இன்று ஆளுகின்ற அந்நிய ஆரியன் களைவிட எவ்வளவோ மேலானவர்கள். ஆங்கிலேயர்கள் காலத் தில்தான் டாக்டர் அம்பேத்கர் அவர்கள்கூட கற்றுத்தேர்ந்து மிக உயர்ந்த நிலையை அடைய முடிந்தது. இந்தியா இன்றுவரை ஒரு இரண்டாவது அம்பேத்கரை ஏன் உருவாக்க முடியவில்லையென் பதற்கு இதுவே சரியான காரணமாகும். பார்ப்பான்களின் சாம் ராஜ்ஜியத்தில் ஒருவர் வாழ்வது கிடக்கட்டும்; மூச்சுவிடக்கூட முடியவில்லையே! காந்தியின் போராட்டத்தின் மூலமே சுதந்திரம் கிடைத்ததென்று காந்திக்கு புகழ்பாடினாலும் பெறப்பட்ட அச் சுதந்திரத்தால் நாமடைந்த அனுகூலங்கள் என்ன? அந்நியர் ஆட்சியைவிட சுயாட்சி நன்றுதான்! இச்சுயாட்சியால் நமக்கென்ன பயன்? உண்மையான சுயாட்சி வந்தேறிகளான ஆரிய ஆதிக்கத்தை தகர்த்தெறிந்து மண்ணின் மைந்தர்களான தலித் மக்கள் தலித் அரசை நிர்மாணிப்பதேயாகும்.

கோட்சே புத்தகத்தின் ஐந்தாம் பகுதி பின்வரும் வாசகங்களை கொட்டை எழுத்துகளில் தாங்கித் தொடர்கிறது! ''காந்தியை அரசியல் அரங்கிலிருந்து ஒழித்துக்கட்ட நான் முடிவு செய்த நாள் முதல் . . .''

அவர் மேற்கொள்ளவிருந்த அச்செயலின் மூலம் இந்தியாவில் தாம் மிகவும் வெறுக்கப்படும் மனிதனாக தம்மை ஆக்கிடும் என்பதை கோட்சே மிக தெளிவாகவே உணர்ந்திருந்தார்; அதை மிகவும் நாணயத்தோடேயே அவர் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் கோட்சேவுக்குத் தம்முடைய மரியாதை செல்வாக்கைக் காட்டிலும் பார்ப்பனீயத்தின் எதிர்காலமே பெரிதும் முக்கியமாய்த் தெரிந்தது. பிர்லா மாளிகைவாசியான காந்தியின் வாழ் நடையைப்பற்றி கோட்சே அதிருப்தியுற்றிருந்தார். இந்தியாவிலுள்ள கோடீசுவரர்களெல்லாம் பணத்தை அளவின்றி காந்திக்கு அள்ளிக் கொடுத்தார்கள். காந்தி துவங்கிய கஸ்தூரியாய் நிதி போன்ற நிதிகளெல்லாம் பல லட்ச ரூபாய்களை ஈர்த்து இழுத்தது. காந்தியினுடைய கூடையில் பணத்தை அள்ளிக்கொட்ட இந் நாட்டிலுள்ள பணக்காரர்களென்ன முட்டாள்களா? காந்திக்கு பணம் கொடுத்தவர்கள் மடையர்களென்றால் அந்த மடையர்கள் அம்பேத்கர் இயக்கத்திற்கு ஏன் நிதி கொடுக்கவில்லை. எங்கெங்கு காந்தி போனாரோ, அங்கெல்லாம் இலட்சாதிபதிகள் வரவேற்று உபசரித்து வாரி வழங்கினர். இவ்வித உண்மையை அக்காலத்திலேயே டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சுட்டிக்காட்டியபோது அன்றைய பார்ப்பான்கள் பலர் அம்பேத்கரைக் கடிந்துரைத்தார்கள். தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு பார்ப்பானைப் பிடித்து டாக்டர் அம்பேத்கர் அவர்கள் எழுதிய, ''What Congress and Gandhi have done to the Untouchables'' எனும் நூலுக்கு மறுப்புரை எழுதச் சொன்னார்கள். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் எழுதிய அப்புத்தகத்திற்கு மறுப்புரை எழுதியதற்காகவே அந்த கே. சந்தானம், நேருவின் அரசில் நிதி அமைச்சராக்கப்பட்டார். டாக்டர் அம்பேத்கர் தொகுத்து எழுதிய உண்மைகளை ஜீரணிக்க முடியாத பார்ப்பான்கள் அன்று அவர்மீது பெரிதும் ஆத்திரமடைந்தார்கள். 'சுரண்டும் கும்பலான முதலாளித்துவ ஏகபோகவாதிகள்தான் காந்தியினுடைய இயக்கத்திற்கு முதலீடு செய்கிறார்கள்' என்ற அதே உண்மையை கோட்சே சொல்லுகிறார். உண்மைக்கு புறம்பானவற்றையும்கூட ஒரு பார்ப்பான் பேசினாலும், ஒரு பார்ப்பான் பொய்யையே சொன்னாலும் அதனை எதிர்த்து எவரும் வாய் திறக்கமுடியாது. பார்ப்பானொருவன் பேசினால் அவன் உண்மையை மட்டுமே பேசுவான் என்பதே இந்து நடைமுறைச் சட்டமாய் உள்ளது.

பாகிஸ்தான் பிரிவினைக்கொள்கையை காந்தி பெரிதும் ஆதரிக்கிறவரென்று கோட்சே திடமாக நம்பினார். அதற்கு பரிகாரம் காந்தியை தீர்த்துக்கட்டிடுவதேயென்றும் உளமாற தீர்மானித்துக் கொண்டார். அவ்வாறே தீர்த்தும் கட்டிவிட்டார். அவருடைய உளப்பூர்வமான கடமையுணர்வை நாம் பாராட்ட வேண்டாமா! கோட்சேயின் காரியங்களில் நமக்கு கருத்து வேறு பாடிருக்கலாம். ஆனால், அவர் ஏற்றிருந்த கடமையுணர்வைப் பற்றி கடுகளவும் சந்தேகப்பட முடியாது. அவரென்ன செய்ய வேண்டுமென்று எண்ணித் துணிந்தாரோ (பின் வாங்காமல்) அக்காரியத்தை செவ்வனே செய்து முடித்தார். தலித் மற்றும் முஸ்லிம் மக்கள், நம்முடைய நண்பர்கள்தான்—சகோதரர்கள் தான் என்று சொல்லிக்கொண்டே இனவெறி பிடித்த வேட்டை நாய்களை அம்மக்கள் மேல் ஏவிவிட்டு, அம்மக்கள் தாக்கப்பட்டு நிர்மூலப்படுத்தப்படும் வேளைகளில் முதலைக் கண்ணீர் வடிக்கும் சோசலிஷப் பார்ப்பான்களைப் போலல்லாமல், கோட்சே எவ்வளவோ நாணயமானவர்.

## கோட்சேயின் வாக்குமூலங்கள் உணர்த்தும் உண்மைகள்

ஆதலால்தான் இன்றும்கூட ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தவர்கள் மற்றும் அநேக பார்ப்பான்கள் கோட்சேயைப் போற்றி வணங்கு கின்றனர். காந்தி கொல்லப்பட்டபோது அந்தப் பார்ப்பான்கள் அனுதாபப்பட்டதான நாடகம் வெறும் கபட நாடகமே! உண்மையில், தனிப்பட்ட முறையில் கோட்சேயின்மீது மிகவும் இரக்கம்கொண்டிருந்தனர். காந்தி திரைப்படம் வெளியான வேளையில் பொது மேடைகளிலும்—செய்தித்தாள்களிலும் பெரும் புகழுரைகள் கரைபுரண்டோடின. ஆனால், காந்தியைக் கொன்றது யார்? அவர் ஏன் கொல்லப்பட்டாரென்று யாராவது ஒரு கேள்வியை எழுப்பினார்களா? கோட்சே காந்தியைக் கொன்றதை நியாயப்படுத்த அவர்கள் கிருஷ்ணன் அர்ச்சுனனை மேற்கோள் காட்டி சுயநலமின்றி, கெட்ட எண்ணமில்லாமல் செய்யப்படும் கொலை புனிதச் செயலென்று அவர்கள் சொன்ன வாதத்தை ஆதாரமாய் சொல்கின்றனர். கோட்சே, தம் இலட்சியக் கடமையை நிறைவேற்ற காந்தியைக் கொன்றது மாபெரும் தியாகச் செயல் என்கின்றனர். ''முற்றிலும் மக்களின் அனுகூலத்திற்காகவே அச் செயலை நான் மேற்கொண்டேன்'' (பக்கம் 112) என்கிறார் கோட்சே. ஒரு பார்ப்பான், ''மனித மேம்பாடெ''ன்பது அவனுடைய சமூக வேலிக்குட்பட்டதென்றே கருதுகின்றான். அதாவது பார்ப்பனீயத்தைப் பாதுகாக்கவே, கோட்சே காந்தியைக் கொன்றார். ''காந்தி செய்த குழப்பமான

# பின்னுரை

## கோட்சேகளுக்கும்—காந்திகளுக்கும் இடையிலான தொடர் போராட்டமே இந்திய வரலாறு!

இச்சிறிய நூல் கோட்சேயைப்பற்றியோ—ஆர்.எஸ்.எஸ்.-ஐப் பற்றியோ எழுதப்பட்ட முற்றான முடிவல்ல. ஆனால் புதுப் புதுவகையில் மறுமலர்ச்சி அடைந்துவரும் இந்து ஆளுமையைப் பற்றிய சுருக்கமான கருத்தேயாகும். இந்திய மார்க்சிஸ்டுகளின் நிலைகூட அநேக வகைகளில் இவ்வகைத் திரிபுவாதத்திற்குட் பட்டதாகவே தெரிகிறது. இந்தியாவிலுள்ள மார்க்சிஸ்டுகள் மேற்கொண்டுள்ள இந்நிலையும் அவர்கள் அனுசரிக்கும் மயான அமைதியுமே அவ்வப்போது தோன்றும் சமூகப்புரட்சி பூகம் பத்தினின்று இந்துயிசம் தப்பிப்பிழைக்கக் காரணமாயுள்ளது.

இந்துயிசம் சந்திக்க நேர்ந்த பூகம்பத்தினின்று அதனைக் காப்பாற்றி—அதற்குப் புது வாழ்வளிப்பவர்கள் காந்திகளேயன்றி —கோட்சேக்களல்ல. இந்துயிசம், இந்து ஆளுமை அச்சுறுத் தலுக்கு ஆட்படும் போதெல்லாம், ஒரு காந்தி பிரசவிப்பது இயல் பாகவே உள்ளது. எனவே, இச்சிறிய நூல் குறிப்பிடத்தக்க அந்த இரண்டு தனி மனிதர்களைப்பற்றியல்ல. இந்து வரலாற்றில் தொடர்ந்து இடம்பெற்று வரும் இரண்டு முரண்பட்ட சக்திகள், இந்துயிசம் நீடிக்கும் வரை நிலைத்திருக்கக்கூடிய இரண்டு பிரதான அம்சங்களைப் பற்றியதாகும்.

கோட்சே, பழமைவாத—பிற்போக்குவாத—திரிபுவாத இந்து களின் பிரதிநிதியாய்த் தெரிகின்றார். காந்தியோ முற்போக்கான —சோசலிசக் கும்பலின் பிரதிநிதியாய்த் தெரிகிறார். இவ்விரு அணிகளுமே இந்து சமூகத்தில் பத்து சதத்திற்கும் குறைவாயுள்ள இந்து மேல் ஜாதியினரின் அந்தஸ்தினைக் கட்டிக் காப்பாற்றவே யாகும். இந்து வரலாறு இவ்விரு சக்திகளின் இடைவிடாதப் போராட்டத்தையே புலப்படுத்துகின்றன. இருவேறு சக்திகளுக் கிடையே இடைவிடாது தொடர்ந்துவரும் இப்போர், வெளித் தோற்றத்தில் பிற்போக்காளர்களுக்கும் முற்போக்காளர்களுக்கு மிடையே நடைபெறும் தத்துவரீதியான போர் என்பதுபோலத் தோன்றும்.

## காங்கிரசும், கம்யூனிஸ்டும் ஒரே மாதிரியான குப்பைகளே!

இன்றுள்ள நிலையில் இந்திரா காந்தி (காங்கிரஸ்)—இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் (மார்க்சிஸ்ட்) லெனின் விருதுப் பெற்ற எஸ்.ஏ. டாங்கே (கம்யூனிஸ்ட்) ஆகியோர் முற்போக்கு சோசலிசப் பார்ப்பான்களின் அணிக்கு தலைமையேற்றுள்ளனர். ஆர்.எஸ்.எஸ். தலைமையில் பழமைவாதப் பிற்போக்குப் பார்ப்பான்கள் அணி சேர்ந்துள்ளனர். இந்நிலவரத்தின் சிறப்பு என்னவென்றால், இவ்விரண்டு அணிகளுக்குமே பார்ப்பான்கள் தலைமையேற்றுள்ளனர். எந்த அணி தோற்றாலும், இந்தியாவைத் தொடர்ந்து ஆளக்கூடியவர்கள் பார்ப்பான்களாய் மட்டுமே இருப்பார்கள். இந்தியாவை ஆளும் கும்பலுக்குச் சொந்தமான செய்தித்தாள்களில் வெளியாகும் தகவல்கள் அவ்விரு அணியினர்க்கிடையே நடைபெறும் போர் மிகவும் உண்மையானதென்று அச் செய்திகளைப் படிக்கிற வாசகர்கள் எண்ணத் தோன்றும். தத்துவரீதியிலான ஓர் உண்மையான போராட்டம் என்றுகூட நினைப்பார்கள். அந்த அளவிற்கு மார்க்சிஸ்டுகளும்—ஆர்.எஸ்.எஸ். காரர்களும் முட்டி மோதிக்கொள்வதைப் போன்ற ஒரு மாயையையே ஏற்படுத்துவார்கள். ஆனால், ஒரு விவகாரத்தில் அதாவது, இந்தியாவை ஆளும் தலைமைப் பதவி பார்ப்பான்கள் கையிலேயே பத்திரமாக இருக்கவேண்டுமென்பதில் இவர்கள் ஒத்தக் கருத்துடையவர்களாய் இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள வெகு மக்களான தலித் மக்கள்—பிற்படுத்தப்பட்ட இந்து ஜாதியினர்—ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினரான பவுத்தர்கள்—முஸ்லிம்கள்—கிறிஸ்தவர்கள்—சீக்கியர்கள் ஆகியோர் கோட்சே கும்பலுக்கும்—காந்தி கும்பலுக்குமிடையே நிகழ்ந்திடும் சச்சரவினை தத்துவ—சித்தாந்த ரீதியிலான போராட்டமென எண்ணிக்கொண்டிருக்கின்றனர். உண்மை நிலையை ஆழ்ந்துணராமல் இம்முடிவுக்கு வந்து ஒடுக்கப்பட்ட மக்கள் ஏதாவதொரு அணியின் சார்பு நிலையேற்கிறார்கள். பிறகு அவ்விரு அணிகளுக்குமான போராட்டத்தை இவர்கள் நடத்தி வீணாய்ப் பலியாகிறார்கள். சாதாரண வெகு மக்கள் வீதியில் போரிட்டு வீழ்ந்து சாகும்போது, கொள்கை முரண்பாட்டுப் போரென்ற அடைகாப்பிற்குள் ஆறாம் கும்பலைச் சார்ந்தவர்கள் ஒய்யாரமாய் ஓரணியில் ஒன்றிணைந்து அதிகாரத்தில் அமர்ந்திருக்கின்றனர். தலித் மக்களும்—பிற ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களும் இதே சூழ்ச்சி வலையில் சூழப்பட்டுத்தான் பன்னூறாண்டுகாலமாகப் பரிதவித்து வருகின்றனர். இந்தியாவில் கொள்கைக் கோட்பாடென்று ஏதுமில்லை. ஜாதி மட்டுமே, ஆட்சியதிகாரத்தை அபகரிக்கவல்ல மாட்சிமைக்குரிய அம்சமாயுள்ளது. இங்குள்ள மார்க்சிஸ்டுகளும்கூட, இக்கருத்துக்கு மனத்தைவிற்றுவிட்டார்கள்.

கோட்சேவும்—காந்தியும், இன்று இல்லாமலிருக்கலாம். அவர்கள் முன்னின்று வழி நடத்திய இரண்டு அணிகளும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. ''பார்ப்பனீயம்''— இந்துயிசம் என்ற ஏகாதிபத்தியக் கொள்கை உருவான காலமுதல் உருப்பெற்ற இவ்விரு அணிகளும் இந்துயிசம் நீடிக்கும் காலம் வரை நிலைத்திருக்கும். எனவே, இச்சிறு நூல், இந்தியாவில் நிலவிடும் சமூக சக்திகளின் இயல்பினை அலசிடுவதேயல்லாமல், இரண்டு தனி நபர்களைப் பற்றிய விமர்சனமல்ல. பிறந்தது பிழைப்பதற்காகவேயென்று எண்ணி, அடிமைப் பிழைப்பையே ருசித்துக் கொண்டிருக்கும் அடிமைப்படுத்தப்பட்ட வெகு மக்களின் மனதில், அபார நினைவுகளை ஏற்படுத்திய கோட்சே—காந்தி ஆகியோரை நாம் பெரிதும் மதிக்கிறோம்.

## இனவெறிச் சிந்தனையே R.S.S.

ஆர்.எஸ்.எஸ். ஒரு ''சிந்தனை'' தான், ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பல்ல. ஆர்.எஸ்.எஸ். இந்து மறுமலர்ச்சிக்குத் தூபமிடும் சிந்தனையேயாகும். ஏனென்றால், ஆர்.எஸ்.எஸ். தோன்றுவதற்கு (1925) முன்பே இச்சிந்தனை தோன்றியிருந்தது. இச்சிந்தனை ஆர்.எஸ்.எஸ். மறைந்தே போனாலும் தொடரும். யூதர்களின் வம்சா வழியினரான ஒரு சிறிய குழு, சிட்பாவன் பார்ப்பான் சாதியினர். கோட்சே அக் குழுவைச் சார்ந்தவர்; கேரளத்தைச் சார்ந்த நம்பூதிரி பார்ப்பானான ஆதி சங்கரனின் மரபு வழிப்படி இந்து நாஜிக் (இனவெறி) கும்பலை சிட்பாவன் பார்ப்பான்கள் வழிநடத்துகிறார்கள். (நம்பூதிரி பார்ப்பான்கள் கி.பி. 700 வாக்கில் கேரளத்திற்குள் நுழைந்தவர்கள்). ஆதலால், அம்மரபு வழியில் கோட்சே இறுதியானவரல்ல. சமீபத்தில் (1983) நடந்த ஜம்மூ—காஷ்மீர் தேர்தலின்போதும்—அதற்கு முன்னால் தில்லியில் நடந்த தேர்தலின்போதும், இந்திரா காந்தியின் இந்து மறுமலர்ச்சிப் பணி ஆர்.எஸ்.எஸ்.ஐயையே, அடையாளம் தெரியாமல் செய்துவிட்டதென்பது கண்கூடு!

### மானமுள்ளவர்கள் ராட்சசர்களே!

பார்ப்பனீயம் திரிபுவாதத்திலேயே திளைத்துச் செழித்திருக்கிறது. வரலாற்றைத் திரித்துச் சொல்லி—பழம் பெருமை பேசி, தலித் மற்றும் தாழ்ந்த ஜாதி இந்துகளுக்கு, உண்மையான எதிரிகள் முஸ்லிம்கள்—கிறிஸ்துவர்கள்—பவுத்தர்கள்—சீக்கியர்கள்—பார்ஸிகள் என்றே புலம்பி அவர்களை பலியாடாய்

ஆக்குகிறார்கள். சிந்தனைக் கொத் (BUNCH OF THOUGHTS) தெழுதிய கோல்வால்க்கர் தலித் (தீண்டாத) மற்ற மலை வாழ் மக்களையும் உள்ளடக்கித்தான் எதிரிகளின் பட்டியலை வெளி யிட்டுள்ளார். பார்ப்பான்கள் சொல்லும் அசுரர்கள்—ராட்சஸர் களை எதிர்க்கும் போரென்பது, நமக்கெதிரான போரென்பதைத் தவிர வேறொன்றுமில்லை. கோல்வால்க்கர், அவர்தம் புத்தகத் தில், ராட்சஸர்களென அடிக்கடி குறிப்பிட்டு இந்துகள் ராட்சஸர் களை அழித்தொழிக்கவேண்டுமென வலியுறுத்துவது, நம்மை அழித்தொழிக்கவேண்டுமென்று ஆணையிடுவதைத்தவிர வேறல்ல. இன்றைக்கும்கூட, நாட்டுப்புறங்களில் தொடர்கின்ற இப் போராட்டம் இந்துகளுக்கும் — ராட்சஸர்களுக்குமிடையிலான நீடித்தப் போராட்டமேயாகும். பார்ப்பான்களை எதிர்த்து வரலாற்று காலந்தொட்டே இடைவிடாப் போராட்டத்தை மேற் கொண்டிருக்கும் நாம் உண்மையில் ராட்சஸர்கள்தான். அதற் காக பெருமைப்படுகிறோம்.

எனவே தலித் மற்றும் சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்ட இந்து தோழர்களுக்கும் ஒரு பணிவான எச்சரிக்கையாகவே இந் நூல் வருகிறது. இந்து இந்தியா, பல நெருக்கடிகளைக் கடந்து செல்கையில், ஒவ்வொரு நெருக்கடிக் காலத்தின்போதும், இந்து. திரிபுவாதம்—மேலும் உக்கிரமான வடிவத்தைப் பெறுகிறது கனன்றுகொண்டிருக்கும் இந்து திரிபுவாதிகளுக்கும்—நமக்கு மிடையிலான ஜாதிப் போரில், இந்து இந்தியாவிலுள்ள மார்க் சிஸ்டுகள் அமைதியுடன் நடுநிலைமை வகித்து ஆளும் கும்பலான மேல் ஜாதியினருடனேயே கலந்திடுவரென்று நாம் நிச்சயமாக நம்பலாம். இந்தியா, உச்சகட்டமான ஓர் ஜாதிப் போராட் டத்தை எதிர் நோக்கிச் செல்கிறது. அந்த இரத்தக் களறியில் நம்முடைய உதிரத்தை உறிஞ்சி குடிக்க ஆளும் கும்பலின் தாகம் அதிகரித் துவருகிறது.

இந்தியாவிலுள்ள தலித் மக்களும்—ஒடுக்கப்பட்ட சிறு பான்மையினரும் இந்துகளின் அராஜக தாக்குதலை தடுத்து நிறுத்திடும் நிலையிலில்லை. ஆளும் கும்பலின் அராஜகத் தாக்கு தல்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மட்டுமே நாம் மேற்கொள்ளமுடியும். பூர்வீக இந்திய மண்ணின் மைந்தர்களாம் நமக்கு, அந்நிய—ஆரிய சுரண்டல் கூட்டத்தினிடமிருந்து நம் தாயகமாம் இந்தியாவை விடுவிக்கவும்—பொதுவுடைமைச் சமநீதியை நிர்மாணிக்கவுமான பெரும் பொறுப்பு காத்துக் கிடக்கிறது.

எதிரியை இனங் கண்டுகொள்வது பேரவசியம். ஏனெனில், நாம் எதிர்கொண்டிருக்கும் எதிரிகள் சாமான்யமானவர்களல்ல

என்பதை நினைவிற்கொள்ளவேண்டும். அவர்கள் உலகிலேயே அறிவுத் திறம் வாய்ந்தவர்களாகக் கருதப்பட்ட ஜெர்மானியர்களையே முட்டாள்களாக்கியவர்கள். ஜெர்மானியர்களின் மூதாதையர்கள் ஆரியர்கள்தானென்று கதையளந்து நம்பச் செய்த வரலாறு சாதாரணச் செயலல்ல. புகழ்பெற்ற மாக்ஸ் முல்லர் இந்தியா தத்துவ கீர்த்திகளின் தேசமென்கிறார். உலகப் புகழ்பெற்ற ஜெர்மன் தத்துவ ஆசிரியர் ஸ்கோபன்ஹேயர்—''மானுட அறிவாற்றலின் உன்னதத் தொகுப்புக் கோர்வையே வேதங்கள்'' — என்கிறார். ஆதலால்தான், பார்ப்பான்கள், இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் வெற்றியை எதிர்பார்த்து ஹிட்லருக்கு வாழ்த்துத் தந்திகளை அனுப்பித் தம் மகத்தான ஆதரவினைப் புலப்படுத்தினர். கல்கத்தா—சென்னை—பூனா போன்ற நகரங்களில் ஹிட்லரின் வெற்றியை குதூகலித்துக் கொண்டாட திட்டமிட்டிருந்தனர். ஜெர்மானிய சமூகக் கட்டுமானப் பணிக்குப் பெரிதும் ஸ்தூலமாய் இருந்தது, புனிதமான வேத படைப்புக்களேயென்று பார்ப்பான்கள் பாத்யதைக் கூறினர். டாக்டர் அகேகாநந்த பாரதி—இந்துகள் ஹிட்லரை மகாத்மாவாகக் கருதினர்—என்கிறார். (*Update* Vol. VI, No. 3, Sep. 82—AR Hus, Denmark) ஹிட்லர், ஜெர்மானிய தேசியக் கொடியில் பதித்திருந்த ஸ்வஸ்திகா சின்னம் பார்ப்பான்களிடமிருந்து இரவலாய்ப் பெறப்பட்டதென்று சொல்லி பார்ப்பான்கள் பெருமிதமடைந்தனர். ஜெர்மானியப் பள்ளிகளில், சமஸ்கிருதம் கட்டாயப் பாடமாக்கப்பட்டதற்காக அவர்கள் மகிழ்ந்து கொண்டாடினர். பார்ப்பான்களின் ஏகபோகத்திற்கு இடைஞ்சலாயிருந்த பிரிட்டிஷ்காரர்களைக் கண்டிக்கவே பிறப்பெடுத்தவர் என்று அவர்கள் ஹிட்லரைப் போற்றினர்: பிரபலமான பார்ப்பன எழுத்தாளர். M.V. காமத் அவர்கள் (Times of India) டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டின் வாஷிங்டன் செய்தியாளராக இருந்தார். பின்னால் இல்லஸ்டிரேட்டட் வீக்லி இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இந்தியன் எக்ஸ்பிரஸ் (மார்ச் 7, 1982) நாளேட்டில். INDIA'S ROAD TO NATION HOOD என்ற புத்தகத்தைத் திறனாய்வுச் செய்கையில் ஜெர்மானியர்களை வானளாவப் புகழ்கிறார். அப்புத்தகத்தில், ஜெர்மன் நூலாசிரியர், திலகர் போன்ற பார்ப்பான்கள் புரட்சியாளர்களைப் புகழ்ந்து எழுதியிருப்பதாகக் குறிப்பிடுகிறார். பார்ப்பான்களின் மோசடியை மேலும் அறியவும், பார்ப்பானகள் ஜெர்மானியர்களை முட்டாள்களாக்கியதெப்படி? உலகத்திலேயே, இனவெறியின் முன்னோடிகளானதெப்படி? என்பனவற்றிற்கெல்லாம் லியோன் பாலியகோவ் எழுதிய 'THE ARYAN MYTH' என்ற நூலைப் படியுங்கள். (New American Library; 1974).

## உலகயுத்தத்துக்குக் காரணமானவர்கள் பார்ப்பான்களே!

நம்முடைய எதிரிகள் சூழ்ச்சித் திறன்மிக்கவர்களாதலால் அவர்களைப் பற்றி பூரணமாய் ஆய்ந்தறிய வேண்டியது நம்முடைய பெருங்கடமையாகும். இரண்டாம் உலகப் போருக்கு காரணமான ஹிட்லரையும், முஸ்ஸோலினியையும், கண்ட உலகம் அக் கொடுங்கோலர்களின் ஏகாதிபத்தியத்திற்கு ஸ்தூலமாய் அமைந்திருந்தது பார்ப்பனீயமே என்பதையும் அறிந்திட வேண்டும். ''Sociology of Revivalism'' (பக்கம் 100–102) எனும் நூலாசிரியர் கங்காதரன் அவர்கள் ஹிட்லரிஸத்திற்கும் ஆர்.எஸ்.எஸ்–க்கும் இடையிலான ஒருசார்பு தன்மைகளை அற்புதமாய் படம் பிடித்து காட்டுகிறார். எனவே பாசிசத்தின் முன்னோடிகள் ஜெர்மானிய சித்தாந்திகளல்ல; ஆக்கிரமிப்பாளர்களான ஆரியன்களும் அவர்கள் நம்மீது திணித்துள்ள பார்ப்பனீயமுமேயாகும். அப்படிப்பட்ட ஆரியன்கள் இயல்பாகவே அகிலத்து மானிடர்களின் எதிரிகளாவர். எனவே அவர்களின் சூழ்ச்சிகளை சந்தித்து வீழ்த்திடுவது நம்முடைய பொறுப்பு மட்டுமல்ல, இவ்வுலகத்தின் பொறுப்புமேயாகும்.

பலம் பொருந்திய உலக மனித விரோதிகளுக்கெதிராக நம்மை நாம் பாதுகாத்துகொள்ளவேண்டுமானால் முற்றிலும் நம்மை தயாராக்கிக்கொள்ளவேண்டும். அவர்களுடைய பாசிசக் கோட்பாடுகளையும், அவர்களிடையே தோன்றும் கோட்சேக்கள், காந்திகளைப் பற்றியும் ஆய்ந்தறிந்திடவேண்டும். இச் சிறிய நூலின்மூலம் அத்திசையில் ஒரு எளிமையான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எதிரிகளின் சூழ்ச்சித் தந்திரங்களை வெளிப்படுத்தி அதனை எதிர்கொள்ளத் தகுந்த வழி வகைகளைத் திட்டமிடுவது, எதிரியின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கணிப்பது, அவர்களின் நடைமுறைக் கோட்பாடுகளைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியமாகும். இவைகளையெல்லாம் மிகத் தெளிவாக அறிந்த பின்பே நாம் நம்முடைய விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இந்தியாவில் தோன்றிய சமூக இயக்கங்கள், அது கோட்சேயைப் போன்ற பழமைவாத பார்ப்பான்களை உள்ளடக்கியதாயினும், காந்தியிசம் பேசும் சோஷலிச பார்ப்பான்களை உள்ளடக்கியதாயினும், அவ்வியக்கங்கள் கடிகாரத்தில் உள்ள பெண்டுலம் மாதிரியே செயல்பட்டு இருக்கின்றன.

கடிகாரத்தின் ஒரு முனைக்கு ஆடிப்போகும் பெண்டுலம் மீண்டும் அடுத்த முனைக்கு போய்ச் சேருகிறது. ஜைனமும், பௌத்தமும் ஆதி சங்கரனனின் வடிவில் ஒரு கோட்சேவைத் தோற்றுவித்தன. இரக்கமின்றி விதவைகள் தீயிலிட்டு எரிக்கப்

படவேண்டும் என்று போதிக்கும் இந்துயிசம், இராஜாராம் மோகன்ராய் மற்றும் விவேகானந்தர் வடிவில், ஒரு காந்தியைத் தோற்றுவித்தது. ஆர். எஸ். எஸ். தோன்றுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே அதன் முன்னோடிகளை திலகர், சவார்க்கர், லாலா லஜபதி இராய், தயானந்த சரஸ்வதி வடிவில் நாம் கண்டோம். இவர்களனைவரும் பொதுவுடைமைக் கோட்பாட்டின் எதிரிகள். ஜாதி அமைப்பு முறையின் பாதுகாவலர்கள். மத சார்பின்மையையும், ஜனநாயகத்தையும் அவர்கள் அறிவு நாணயத்தோடு மறுதலித்தார்கள். ஏனெனில் அக் கொள்கைகள் இந்துயிசப் பழிப்பென்று அவர்கள் கருதினார்கள். கடிகாரத்தின் பெண்டுலம் ஒரு முனையை அடைந்தபொழுது அது சமுதாயத்தில் ஒரு துடிப்பை ஏற்படுத்தியது. விடுதலைக் கிளர்ச்சியின்பொழுது அக்கிளர்ச்சி ஒரு முழுப் புரட்சியாய் வெடித்திட இருந்த வேளையில் அப்புரட்சியை மழுங்கடித்து இந்துயிசத்திற்கு புனர்வாழ்வளித்திட காந்தி வந்தார். விடுதலைக் கிளர்ச்சி என்பது பார்ப்பான்கள் தெம்பூட்டி பிரிட்டிஷ்காரர்களை வெளியேற்றி விட்டு பார்ப்பான்களின் ஆட்சியதிகாரத்தை நிர்மாணிப்பதற்கேயல்லாமல் வேறல்ல. கோட்சேவைப்போன்ற இனவெறியர்களாவது ஒரு இரணகளத்தை உருவாக்கியிருப்பார்கள். அதன்மூலம் சீனா சந்தித்தது போன்ற ஒரு மாபெரும் மக்கள் புரட்சியை, இந்தியாவும் கண்டிருக்கக் கூடும். ஆனால் காந்தியோ, புரட்சிக்கெதிரான நடவடிக்கைகளின்மூலம் அவ்வித நம்பிக்கையை முற்றிலும் தகர்த்திட்டார். எனவே, வர்ண—வர்க்க முரண்பாடுகளை கூர்மைப்படுத்திடும் நோக்கில், தேங்கிய சாக்கடையாயுள்ள துர்நாற்றமடிக்கும் இந்து ஜாதி சாக்கடையை கலக்கிடவேண்டும். நாம் கோட்சேக்களை வரவேற்கலாம், காந்திகளையல்ல.

ஆதலால்தான், பார்ப்பான்கள், சத்திரியர்கள், வைஷியர்கள் மற்றும் நிலவுடைமைக்கு அதிபதிகளான மேல் ஜாதிக்காரர்களை உள்ளடக்கிய ஆளும் வர்க்கம் புரட்சியை தடுத்திட்ட காந்திக்கு என்றும் நன்றிக்கடப்பாடுடையவர்களாய் இருக்கின்றனர். அதனால்தான் காந்தியை 'தேசப்பிதா' என்கிறார்கள்.

இந்து பாசிச, ஆர். எஸ். எஸ். கும்பலால் காந்தி கொல்லப்பட்டார். காந்தியைக் கொன்றபோது கோட்சே ஆர். எஸ். எஸ்.-ல் இல்லை என ஆர். எஸ். எஸ். கும்பல் கோர்ட்டில் வாதிட்டு, வெற்றிகரமாக தம்மை விடுவித்துக்கொண்டிருக்கலாம். ஒரு ஆர். எஸ். எஸ். காரன் ஏதாவது குற்றமிழைத்து மாட்டிக்கொண்டால், அவன் ஆர். எஸ். எஸ். காரனல்லவென்று, அந்த ஆளை கைகழுவி விடுவது ஆர். எஸ். எஸ்.-ன் மரபாகும். இந்நாட்டின் நீதிபதிகள், போலீஸ்காரர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும்

அரசுகள் அனைத்தும் இந்துகளுக்கு கட்டுப்பட்டே இயங்கிடுவதால் அவர்களெல்லாரும் கோட்சேக்களையும்கூட பழி, பாவமற்ற வர்கள் என்பர். ஆனால் காந்தி ஆர். எஸ். எஸ். காரர்களால் கொல்லப்பட்டார் என்று இந்தியாவில் ஒரு குழந்தைகூடச் சொல்லும். (மேலும் விவரங்களுக்கு அமெரிக்க C.I.A. ஏஜன் டான Curran அவர்கள் R.S.S. பற்றி எழுதிய, ''Militant Hinduism in Indian Politics'' All India Quaumi Ekta Samelan Delhi—*1970* எனும் நூலில் காண்க.) நாதுராம் கோட்சே ஆர். எஸ், எஸ்.-டன் கொண்டிருந்த தொடர்பினை புலப்படுத்த மாராத்திய வார இதழான Sobat இதழில் கோபால் கோட்சேயின் கட்டுரையையும், 'Mainstream' (July, *1970*) இதழில், எஸ். எஸ். கனோல்கர் அவர்களின் கட்டுரையையும் K. K. கங்காதரன் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார். ''அதாவது காந்தி கொலை வழக்கில் தண்டனையை அனுபவித்து விடுதலை யாகி வெளிவந்த கோபால் கோட்சே தாமும் நாதுராம் கோட்சே யும் ஆர். எஸ். எஸ். கும்பலை சார்ந்தவர்களே என்கிறார். அவர் உண்மையைச் சொல்லிப் பெருமிதப்படுகிறார். இதன் தொடர் பாய் தப்பிக்கும் நோக்கில் ஜனசங்கம் மேற்கொண்ட அணுகு முறையை அவர் வன்மையாகக் கண்டிக்கிறார். தாமும், நாதுராம் கோட்சேயும் ஆர். எஸ். எஸ்.-ஐச் சார்ந்தவர்கள் என்பதையும், காந்தி படுகொலைக்கு தாமே பொறுப்பென்பதையும் நியாயப் படுத்தி கோபால் கோட்சே உறுதியாகச் சொல்கிறார்'' எனக் குறிப்பிடுகிறார்.

## பார்ப்பான்கள் பரிமாற்றத்துக்குட்பட்டவர்களே

சுட்டுக்கொல்லப்பட்டதால் காந்தி தியாகியாகி விட்டார். மாறான பண்புகளைக் கொண்டிருந்த காந்தியின் பெயர் புகழுடன் நிலவிட இவ் வகையில் ஆர். எஸ். எஸ். காரர்கள் உதவியுள்ளனர். இந்துயிசம் அச்சுறுத்தலுக்கு ஆட்படும்போதெல்லாம் ஒரு கோட்சே யும், ஒரு காந்தியும் இயல்பாகவே அரங்கேறுவர். பண்பின் அடிப் படையில் காந்தியும், கோட்சேயும் ஒருவருக்கொருவர் பரிமாற்றத் திற்குட்பட்டவர்களே! காந்தியை பெரும் தியாகியாக்கிட கோட்சே உதவினார், கோட்சேயை அனைவரும் அறிந்திட காந்தி உதவி னார். கோட்சே கொடியவரென்றால், காந்தி வன்கொடியவரா வார். ஏனெனில் அவ்விரு சக்திகளுமே இந்துயிசத்தை கட்டிப் பாதுகாக்கும் சக்திகளாகும். உண்மையில் கோட்சேக்களைப் போன்றவர்கள் பார்வைக்கு தெரிகின்ற நாணயமான எதிரிகள். அவர்களின் கோட்பாடுகள் மற்றும் செயல்களை நாம் தெரிந்து கொள்ளமுடியும். அவர்களின் அக்கிரமங்கள், சச்சரவுகள் நமக்கு

எதிரிலேயே நிகழ்கின்றன. அந்த எதிரிகளின் நடவடிக்கைகளை நாம் நன்கு காணமுடிகிறது. ஆனால் காந்திகளைப் போன்றவர் களோ வன்கொடியவர்கள். ஏனெனில் அவர்கள் நம்மிடம் நண்பர்களைப்போல் உறவு பாராட்டி மெல்ல, மெல்ல நம்மை விஷமிட்டுக் கொன்றிடுவார்கள். ஒளிந்து மறைந்திருக்கும் விரோதியைவிட நேரெதிரே நின்று போரிடும் எதிரியே மேல். நம்மைக் கொடுமைப்படுத்திச் சுட்டுக்கொன்று எரிகின்ற தீயில் எடுத்து வீசி சுட்டுச் சாம்பலாக்கிடும் எதிரிகளைவிட இனிய வார்த்தைகளால் இளித்துப் பேசி, அணைத்து உறவாடுவதுபோல் பாவித்து, அணு, அணுவாய்க் கொன்றிடும் அயோக்கியர்களே பெரும் துரோகிகள்! எனவே, தலித் மற்றும் ஒடுக்கப்பட்ட சிறு பான்மை மக்கள் நலன் கருதி நாம் கோட்சேகளை வரவேற் கிறோம். கோட்சே போன்றோரின் காரியங்கள் நம் கோபத்தைக் கொழுந்துவிட்டு எரியச் செய்கின்றன. காந்தி போன்றோரின் காயெங்களோ நம் எழுச்சியை மாய்த்து அடிமைத்தனத்தையே ருசித்துத் திளைத்து சீரழிந்திடச் செய்கின்றன.

### அறிவு ஜீவிகளே ஆர்த்தெழுங்கள்!

எது எப்படியிருப்பினும், நாம், நம்முடைய செயற்பாடுகளை அறிவுபூர்வமாக உருவாக்கிடவேண்டும். இந்தியா விடுவிக்கப்பட வேண்டுமானால் கோட்சேகள், காந்திகள் ஆகிய இருவரின் சிந்தனை வழிப்பட்டவர்களுமே ஒழிக்கப்படவேண்டும். இருபதாம் நூற்றாண்டு முடிவடைய இன்னும் 17 ஆண்டுகளேயுள்ளன. காந்தியின் காலமாகக் கருதப்படும் இருபதாம் நூற்றாண்டு நிறை வடைவதற்குள் மேற்சொன்ன இலட்சியத்தைப் பூர்த்தி செய்திட வேண்டும். 21-ம் நூற்றாண்டு அம்பேத்கர் யுகமாக மிளிர்ந்திடு தல் வேண்டும். இதனை நாம் வலியுறுத்திச் சொல்லி வருகிறோம். 21-ம் நூற்றாண்டின் தொடக்கமே இந்திய விடுதலைப் புரட்சியை தலித் மக்கள் தலைமை ஏற்று முன் நடத்தி செல்ல வேண்டும். நேரம் ஓடிக்கொண்டேயிருக்கிறது. எனவே, தலித் மக்கள் முனைந்து செயல்பட அறைகூவல் விடுக்கிறோம். தலித் சிந்தனை யாளர்களுக்கு இப்பணியில் பெரும் பொறுப்புண்டு. இவ்விடுதலைப் படைக்குத் தலைமையேற்று வழிநடத்த வல்லவர்கள் அவர்களே யாவர். அப்படிப்பட்ட போரணியை வழிநடத்திப் புறப்படுமுன் கோட்சேகளையும், காந்திகளையும் மிக நன்கு ஆழ்ந்தறிய வேண்டியது தலித் சிந்தனையாளர்களேயாவர். அவர்களுக்காக எழுதப்பட்டதே இச்சிறிய நூல்:

கோட்சே காந்தியைக் கொன்றதேன்?

---

# DALIT SAHITYA AKADEMY PUBLICATIONS

| | | Price Rs. |
|---|---|---|
| 1. | ஏன் இந்த மதமாற்றம்? .. | 3.00 |
| 2. | ஐ. நா. சபையில் தலித் குரல்! .. | 1.00 |
| 3. | மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு | 15·00 |
| 1. | Basavalingappa's Rationalist Battle (*out of print*) | 0.50 |
| 2. | Conspiracy Behind Communal Riots (a study of India's Muslim problem) ,, .. | 1.00 |
| 3. | Havanur & The Bible of the Backward Classes ,, .. | 2.00 |
| 4. | Relevance of China ,, .. | 0.25 |
| 5. | Crocodile Tears Over 'Harijan' Atrocities ,, .. | 0.25 |
| 6. | 'Harijan' Atrocities—Why Blame Police? ,, .. | 0.25 |
| 7. | Dalit Movement in Karnataka ,, .. | 12.00 |
| 8. | The Agony of Being A Muslim ,, .. | 0.25 |
| 9. | Untouchability—Can it be Removed? ,, .. | 0.50 |
| 10. | How Marx Failed in Hindu India (1984 *Reprint*) .. | 2.00 |
| 11. | Dalit Sahitya (Kannada) .. | 0.25 |
| 12. | Tribal Unrest—Whom to blame? .. | 1.00 |
| 13. | Class-Caste Struggle : Emerging Third Force (1984 *Reprint*) .. | 3.00 |
| 14. | Who is Ruling India? ,, .. | 5.00 |
| 15. | Why Go for Conversion? .. | 1.00 |
| 16. | Ambedkar & His Conversion (*2nd revised edition*) .. | 10.00 |
| 17. | How To Destroy Caste System? .. | 3.00 |
| 18. | Brahminism (The curse of India) (*2nd Reprint*) .. | 4.00 |
| 19. | Apartheid in India—A Document for Foreigners (*Second Revised Edition*) .. | 5.00 |
| 20 | Who is the Mother of Hitler? .. | 3.00 |
| 21. | Why Godse Killed Gandhi? .. | 2.00 |
| 22. | Dilemma of Class & Caste .. | 5.00 |
| 23. | Hinduism, Fascism and Gandhism .. | 5.00 |
| | *All by V. T. Rajshekar* | |
| 24. | The Untouchables of India (*out of print*) .. | 5.00 |
| 25. | Ambedkar and Secularism .. | 3.00 |
| | *By prof A. M. Dharmalingam* | |
| 26. | The Unchristian side of the Indian church *Rev. M. Azariah* .. | 3.00 |

# மக்களிடையே தோன்றிய மகாத்மா!

. . . மே, 11, 1888. பம்பாய் மாண்ட்வியிலுள்ள கோலிவாடா மண்டபம் மக்களால் நிரம்பி வழிந்தது. இந்து மத ஜாதி தீண்டாமைக் கொடுமைகளுக்கெதிராய்த் தீவிர மக்களியக்கத்தை நடத்திய ஜோதிராவ் பூலே (மகார்) அவர்களின் 60ம் ஆண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடிடவே மக்கள் கூடியிருந்தனர். பரோடா மகாராஜா காயாஜிராவ் அவர்கள் சிறப்பு விருந்தினராய் வந்திருந்தார்.

மத்திய இந்தியாவில் பேஷ்வாக்களாயிருந்த பார்ப்பான்களின் ஏகபோக ஆதிக்கம் கொடிகட்டிப் பரந்த காலம்; தீண்டாத மக்களை மனிதர்களாய்க் கருதுவதுகூட தகாத செயலென்று ஆரியப் பரதேசிகள் ஆங்கிலேயருக்கு ஆலோசனைகள் நல்கிய வேளை. அந்தக் காலகட்டத்தில்தான் ஜோதிராவ் பூலே அவர்கள் தலைமையேற்று நடத்திய 'சத்யசோதக் சமாஜ்' வெகு மக்களின் சமூக விடுதலை இயக்கமாய் மலர்ந்தது.

ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்த ஜோதிராவ் பூலே அவர்களைப் போற்றிப் பாராட்ட அன்று ஏராளமானோர் கூடியிருந்தனர். பரோடா மன்னர் காயாஜிராவ் அவர்கள் பூலே அவர்களை 'புக்கர். டி. வாஷிங்டன்' எனும் பட்டமளித்துப் பாராட்டலாமென்றார். மக்களின் விருப்பமோ வேறாயிருந்தது. கூடியிருந்த மக்களெல்லாம் ஏக காலத்தில் 'மகாத்மா' என்றழைக்கலாமென்றார்கள்.

அன்று முதல் ஜோதிராவ் பூலே 'மகாத்மா பூலே' என்றழைக்கப்பட்டார். அவர்தம் மறைவுக்குப் பின் 'மகாத்மா' எனும் சொல்லின் பொருளுக்குப் பொருந்துகிற வேறொரு மனிதரை இந்தியா பெற்றிடவில்லை. நாமறிந்த 'மகாத்மா'—மகாத்மா பூலே அவர்களே யாவார். (**Dhananjaykeer, 'Mahatma Jotirao Phooley' pages, 234, 236, Popular Prakashan, Bombay 1964.**)